# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி02செவ்வாய்க்கிழமை(18-08-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 225


## மட்டக்களப்பில் குண்டுவெடிப்பு!

## 2 பெண் பொலிஸார் உட்பட 17 பேர் காயம்

மட்டக்களப்பு, ஓகஸ்ட் 18

மட்டக்களப்பு நகரில் நேற்றுப் பிற்பகல் 1-00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்ததாகக் கூறப்படும் குண்டு ஒன்று வெடித்ததில் இரு பெண்பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட மூன்றுபொலிஸாரும் பதின்னான்கு பொதுமக்களும் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் உள்ள தனியார் வங்கி ஒன்றின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த Mate - 50 ரக மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த குண்டே வெடித்ததாகக் கருதப்படுகின்றது.

குண்டு வெடித்ததும் மோட்டார் சைக்கிலில் பற்றிய தீ அருகில் உள்ள கட்டடங்கள், வாகனங்களுக்கும் பரவத் தொடங்கியது. எனினும் தீ உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

சம்பவ இடத்துக்கு அருகில் சோதனைச் சாவடியில் காவலில் இருந்த பொலிஸாரும் காயமடைந்தனர்.

இக்குண்டு வெடிப்பால் அருகில் இருந்த பல கட்டடங்கள் சேதமடைந்தன. வாகனத் தரிப்பிடத்தில்

(10ஆம் பக்கம் பார்க்க)



செயலக வளவில் நேற்று நடைபெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட வர்த்தகர்களில் ஒரு பகுதியினரைப் படங்களில் காணலாம். அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் வர்த்தகர்களுடன் காணப்படுகின்றனர்.

படம் : மணி

## வவுனியாவில் ஹர்த்தால் தொடர்கிறது

வவுனியா, ஓக. 18

வவுனியா நகரில் எரிபொருள் விநியோகத்தில் புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை எதிர்த்து நடத்தப்பட்டு வரும் ஹர்த்தால் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

நகரில் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன. துவிச்சக்கர வண்டிகள் தவிர்ந்த ஏனைய வாகனங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர் சடலம் ஒப்படைப்பு

வவுனியா, ஓக. 18

கடந்த சனிக்கிழமை வவுனியாவில் தேக்கங்காடு பகுதியில் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலம் நேற்று விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

'புளொட்' உறுப்பினர் ஒருவரை சுட்டுக் கொன்ற பின்னர் தப்பியோடிய போது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தகர்க்கப்பட்ட கப்பலின் இந்திய மாலுமிகள் இன்று கொழும்புக்கு

கொழும்பு, ஓக. 18

முல்லைத்தீவு கடற்பரப்பில் தாக்கி அழிக்கப்பட்ட 'பிரின்ஸஸ் காஷ்' கப்பலின் 17 இந்திய மாலுமிகளும் இன்று கொழும்புக்கு அழைத்து வரப்பட உள்ளனர். இதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளால் நிபந்தனைகள் இன்றி விடுவிக்கப்பட்ட இந்த 17பேரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்டனுக்கு எதிராக நடவடிக்கை இல்லை?

புதுடில்லி, ஓக. 18

'பிறின்ஸஸ் காஷ்' கப்பலின் கப்டன் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கப்பலைக் கரையோரமாகச் செலுத்தினார் எனவும் —

கடற்படையினரின் எச்சரிக்கையை மீறிச் செயற்பட்டார் எனவும் — சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அரசு தொடர்ந்து வலியுறுத்தாது என்று அரசதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கப்பல் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் அதிகாரிகள் கப்பல் கப்டனுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இல்லை எனத் திட்டவட்டமாகத் திருப்தி அடைந்து இருப்பதனாலேயேவிசாரணையைமேலும் தொடரத் தேவையில்லை என அதிகாரிகள் முடிவெடுத்திருப்பதாகவும் புதுடில்லி செய்திகள் தெரிவித்தன.

## நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் செயலக வளவில் உண்ணாவிரதம்!

### ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக,18

'பிறின்ஸ்ஸஸ் காஷ்' கப்பல் குண்டுவீசி அழிக்கப்பட்டதால் தமது பொருள்களை இழந்த குடாநாட்டு வர்த்தகர்கள் தமது இழப்புக்குஅரசு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனக் கோரி நேற்று யாழ். செயலக வளவில் அடையாள உண்ணா விரதம் அனுஷ்டித்தனர்.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இந்த உண்ணாவிரதத்தில் நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். அமைதியான முறையில் இடம்பெற்ற இந்த உண்ணா விரதத்தில்– 'இலங்கை வர்த்தகர்களே! பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்காகக் குரல் கொடுங்கள்;' 'பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு உடன் நஷ்டஈடு வழங்கு!' 'கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் யாவும் அரசின் அங்கீகாரம் பெற்றதே!' 'கைது செய்யப்பட்ட எஸ். வி. எம். சதானந்தனை உடனே விடுதலை செய்!' உறவுக்கு கை கொடுப்போம்! உரிமைக்கு குரல் கொடுப்போம்' போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கியவாறு உண்ணாவிரதிகள் காணப்பட்டனர்.

உண்ணாவிரதிகளுக்கு ஆதரவு தெரிவித்து தமிழர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அவசியப் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாடு!

### வர்த்தகர்கள் விஷமத்தனம்

யாழ்ப்பாணம், ஓக. 18

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சரக்குக் கப்பல் ஒன்று தகர்க்கப்பட்ட சம்பவத்தை அடுத்து யாழ். நகரில் உள்ள பல வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு இருப்பதுபோலஒருமாயையை உருவாக்கி மக்கள் பணத்தைக் கொள்ளையடித்துச் சூறையாடும் விஷமத்தனமான செயலை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இது குறித்து பொது மக்கள் பலரும் வேதனையும் விசனமும் தெரிவித்திருக்கின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடு பஸ்விபத்தில் யாழ். இளைஞர் பலி!

### 10 பேர் காயம்

வவுனியா, ஓக. 18

கிளிநொச்சியில் இரணைமடு அணைக்கட்டில் தனியாருக்குச் சொந்தமான வான் ஒன்று நேற்றுமுன்தினம் தடம் புரண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். பத்துப்பேர் காயமடைந்தனர்.

மடு மாதா உற்சவத்தில் கலந்துகொண்ட பின்னர் வானில் திரும்பிக்கொண்டிருந்த சமயமே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. வானில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 15 பேர் பயணம் செய்தனர்.

யாழ்ப்பாணம் கச்சேரியடியைச் சேர்ந்தவரும் விஸ்வமடுவில் வசித்தவருமான கந்தசாமி மனோகரன் (வயது22) என்ற இளைஞரே இவ்விபத்தில் உயிரிழந்தார். காயமடைந்த 10 பேரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலத்தில் இப்பகுதியில் இடம்பெற்ற மூன்றாவது விபத்துச் சம்பவம் இதுவாகும். (ஐ-9)

## படை அதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பான செய்திகளுக்கும் தடை!

கொழும்பு, ஓக. 18

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் இடமாற்றங்கள் தொடர்பான செய்திகளை தொடர்பு சாதனங்களிலும் பத்திரிகைகளிலும் வெளியிடுவதை பாதுகாப்பு அமைச்சு தடை செய்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்தது.

இராணுவ அதிகாரிகளின் இடமாற்றங்கள் பற்றிய செய்திகள் முன் கூட்டியே வெளியாகுவதால் விடுதலைப்புலிகள் பயனடைவதாகவும், அதன் காரணமாகவே அவற்றை வெளியிடுவது தடை செய்யப்படுவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

யுத்தச் செய்திகளை வெளியிடுவதற்குத் தற்போது தணிக்கை அமுலில் இருந்து வருவது தெரிந்ததே. [ஐ-9]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விற்பனையில் சலுகை!

## ராகம்ஸ் பட்டுச்சோலையின்

## நல்லூர் தேர், தீர்த்தோற்சவ

## மலிவு விற்பனை

யாழ். நகரிலேயே பிரசித்தி பெற்ற
ராகம்ஸ் பட்டுச்சோலை ஸ்தாபனத்தார்

தனது வாடிக்கையாளர், நண்பர்கள், ஆதரவாளர் களின் நலன்கருதி பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட தரம்மிக்க வர்ண வர்ண புத்தம் புதிய அனைத்து ஜவுளி வகைகளும் மலிவு விலையில் விற்பனை செய்கின்றார்கள்.

முந்துங்கள்! உங்கள் தெரிவுக்கு!!

## ராகம்ஸ் பட்டுச்சோலை

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ஆலய முன்வீதி முன்பாக, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(சி/4589)

## கண்ணீர் அஞ்சலி

இறைபதம் எய்திய

### பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்யசாஸ்திரிகள்

அவர்களுக்கு எமதுகண்ணீர் அஞ்சலிகள்!

தமது அருமைத் தந்தையாரின் பிரிவால் துயருறும் எமது சக ஊழியர்களான செல்விகள் நிர்மலா தேவி, விசாலாட்சி, செல்வன் நவநீதகிருஷ்ணன் ஆகியோருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளர் - ஊழியர்கள்,
மக்கள் வங்கி, சாவகச்சேரி.

(58463)

## யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்

அன்பான வர்த்தகப் பெருமக்களே!

'பிறின்ஸஸ் காஷ்' கப்பலில் பொருள்கள் தருவித்த வர்த்தகர்களுக்கு அக் கப்பலுக்கு ஏற்பட்ட அனர்த்தத்தினால் ஏற்பட்ட நட்டங்களுக்காக எமது ஆழ்ந்த மனக்கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தங்கள் கையிருப்பில் உள்ள பொருட்களைப் பதுக்கவோ, கூடிய விலைக்கு விற்கவோ வேண்டாம் என சகல வர்த்தகர்களையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்.

(சி/4592)

## யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம்

யா/யூனியன் கல்லூரியின்
பழைய மாணவர் சங்க ஆதரவுடன் இயங்கும்
"யூனியன்ஸ்" விளையாட்டுக்கழகம்
உதைபந்தாட்ட, துடுப்பாட்டக் குழுக்களை
அமைக்க இருக்கின்றது.

ஆர்வமுள்ள யா/யூனியன் கல்லூரி பழைய மாணவர்களை 25-08-1998 இற்கு முன்பாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
யா/யூனியன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பளை.

(58460)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## 'பிறின்ஸஸ் காஷ்' கப்பலில்

பொருள்கள் ஏற்றி பாதிக்கப்பட்ட

## வர்த்தகர்களுக்கான வேண்டுகோள்

"பிறின்ஸஸ் காஷ்" கப்பலில் பொருள்கள் ஏற்றி பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விவரங்களை 18-08-98 காலை 11.00 மணிக்கு முன் எமது கழகக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இல: 19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/4591)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நாளையும் எதிர்வரும் 21ஆம் திகதியும் யாழ். பல்கலைக்கழக உள்ளரங்கில் நடைபெறுவதாக இருந்த மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும்— போட்டி நடைபெறும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும்— அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொகை மதிப்பீட்டுப் படிவம்

வேலணை, ஊர்காவற்றுறைப் பாடசாலைகளின் தொகை மதிப்பீட்டுப் படிவங்களை அப்பாடசாலைகளின் அதிபர்கள் பூரணப்படுத்தி எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்வி அதிகாரி ந. தருமலிங்கம் தெரிவித்துள்ளார். (இ-8)

### ப்ரியா சினிமா

மருதடி, பருத்தித்துறை.
18 முதல் 22 வரை
விஜய், சுவலட்சுமி
நடித்த
நிலாவே வா
(புதிய வெளியீடு)
10-30, 2-30
[பழைய நேரம்]
[58464]

### நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்
2 ஆவது வெற்றி வாரமாக
சுப்பர் ஸ்ரார் ரஜனி
நக்மா நடித்த
பாட்ஷா
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58456)

### ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
இறுதி வாரமாக
சிவாஜி - ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசி
சத்தியராஜ் நடித்த
முதல் மரியாதை
25-08-98 முதல்
ரஜனி, மீனா
சரத்பாபு நடித்த
முத்து
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4560)

### லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று முதல்
விஜய், சுவலட்சுமி,
சார்லி, சங்கவி நடித்த
நிலாவே வா
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223
(58276)

### சிவா

வெண் திரை
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
விஜய், சுவலட்சுமி
நடித்த
நிலாவே வா
(புதிய வெளியீடு)
நேரம்: 10-30, 2-30
(58465)

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞரும்,
சிங்கள, ஆங்கில ஆசிரியரும்)

கல்வயலைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வர் நாகமுத்து இராசரத்தினம் அவர்கள் 16-08-98 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சிவதாசன் (பகுதி நேர ஆங்கில ஆசிரியர், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), மாலதி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லத்துரை (ஐயா), காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி, சின்னம்மா, கந்தையா, கமலம், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், திருமதி கந்தையா கமலாம்பிகையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 18-08-98 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. இராசரத்தினம்
(மனைவி)
பிள்ளைகள்

கல்வயல்,
சாவகச்சேரி.

(58455)

### A.T.S.இரத்தினசிங்கம் (லண்டன்)

காலஞ் சென்ற A. T. சின்னத்துரை (அல்வாய்) தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற வைத்தியர் சின்னத்துரை (தம்பசெட்டி) தம்பதிகளின் மருமகனும், கருணேஸ்வரியின் அன்புக் கணவரும், லண்டன் பிள்ளையார் கோயில் ஸ்தாபகருமாகிய A. T. S. இரத்தினசிங்கம் 16-08-98 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் அகால மரணமடைந்தார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
A. T. S கந்தசாமி
(மோட்டஞ்சீமா, அல்வாய்)
S. சச்சிதானந்தம்
(வைத்தியர், அல்வாய் கிழக்கு)

(58457)

### இராமலிங்கம் சொர்ணம்மா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சொர்ணம்மா 16. 08. 1998 ஞாயிறு அன்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், எஸ். ஆர். கந்தசாமி (புங்குடுதீவு எரிபொருள் நிலைய முன்னாள் உரிமையாளர், தற்போது அமெரிக்கா), பசுபதிப்பிள்ளை ((கொழும்பு), மீனாட்சிஅம்மா (கொழும்பு), செல்லம்மா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தவமணி, புவனேஸ்வரி (கொழும்பு) காலஞ்சென்ற கனகசுந்தரம் (S. N. K.), இராமலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (18. 08. 1998) இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சந்திரகலா சண்முகலிங்கம்
(பேர்த்தி)

132/3 பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

(58440)

திருமதி

### சறோஜினிதேவி குலநாயகம்

அராலி தெற்கைச் சேர்ந்த திருமதி சறோஜினிதேவி குலநாயகம் (ஆசிரியை அராலி கிழக்கு அ. மி. த. க. பாடசாலை) 15. 08. 1998 சனிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் துன்னாலை தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை குலநாயகம் (எழுதுவினைஞர், மாநகரசபை யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் ரஜிலதாவின் பாசமிகு தாயாரும், திரு ச. கயிலாசபிள்ளை (நிர்வாக உத்தியோகத்தர், ஓய்வூதியப் பகுதி மாகாணசபை, திருகோணமலை), பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், துன்னாலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சிற்றம்பலம்- வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், விஜயகுமார் (ஆசிரியர், நவாலி ஸ்தான அ. மி. த. க. பாடசாலை), பாலகுமார் (ஜேர்மனி), நந்தகுமார் (நூலகப் பொறுப்பாளர் மாகாணக் கல்வியமைச்சு திருகோணமலை), கலாதேவி (ஆசிரியை, சண்முக வித்தியாலயம், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குலேந்திரன் (கட்டிடப் பரிசோதகர் - கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), பாலேந்திரன் (பொறியியலாளர், லண்டன்), இந்திரராணி, தெய்வேந்திரன் (ஜேர்மனி), கௌரி (ஈஸ்வரன் பிறதேர்ஸ் கொழும்பு), சிதம்பரநாதன் (ஓய்வு பெற்ற அதிபர் இடைக்காடு மகாவித்தியாலயம்), கௌரி மனோகரி (ஆசிரியை அராலி இந்துக்கல்லூரி), பவானி (ஜேர்மனி), சரோமினி ஆசிரியை (திருகோணமலை), திருமதி கு. விஜயகுமாரி (மாகாணக்கல்வித் திணைக்களம், திருகோணமலை), திருமதி சி. சிவயோகதேவி (ஆசிரியை, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
திரு வே. குலநாயகம்
(கணவன்)
திரு. திருமதி கயிலாசபிள்ளை பரமேஸ்வரி
(தாய், தந்தையர்)

(58449)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுவெடிப்பின் மத்தியிலும்

# சமரச முயற்சிகள் தொடரும்!

## ரொனிபிளயர் வட அயர்லாந்து பயணம்

பெல்பாஸ்ட், ஓகஸ் 18

வட அயர்லாந்தில் கார் குண்டு வெடிப்பினால் 28 பேர் உயிரிழந்து, 220 பேர் காயமடைந்துள்ள போதிலும் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் பிரான்சில் மேற்கொண்டிருந்த விடுமுறைப் பயணத்தை ரத்து செய்துவிட்டு வட அயர்லாந்துக்குச் சென்றுள்ளார்.

ஐரிஷ் பிரதமர் தனது பாதுகாப்பு அமைச்சர்களுடன் ஆலோசனைகளை நடத்தி நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

வட அயர்லாந்தின் தலைநகர் பெல்பாஸ்ட்டிலிருந்து 80 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஏமாக் என்ற நகரில் இடம்பெற்ற இக் குண்டு வெடிப்பில் உயிரிழந்தோரில் 9 சிறுவர்களும் அடங்குவர்.

காயமடைந்த பலர் ஆபத்தான நிலையில் இன்றும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஐ. ஆர். ஏ இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் ஜெரி அடெம்ஸ் இந்தக் குண்டுவெடிப்பை மிக வன்மையாகக் கண்டித்துள்ளார்.

வட அயர்லாந்துக்கான சமாதானத்திட்டம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுமென்று பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்றிக்கொட் உடனடியாகவே அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். (இ-8)

## அண்ணாத்துரை பற்றிய குறும்படம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான சி. என். அண்ணாத்துரையின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் குறுந்திரைப்படம் அவரது பிறந்த தினமான அடுத்த மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இதற்கான படப்பிடிப்பு காஞ்சிபுரத்தில் அண்ணா வாழ்ந்த வீட்டில் நடைபெற்று வருகிறது. அண்ணா குறித்து இதுவரை வெளிவராத பல தகவல்கள் இதில் இடம் பெறுகின்றன.

## இந்தியா-பாகிஸ்தானுடன் அமெ. பேச்சு நடத்தும்

புதுடில்லி ஓக: 18

இந்தியாவும் பாகிஸ்தானும் அணுஆயுதச் சோதனைகளை நடத்தியுள்ளதை அடுத்து ஏற்பட்டுள்ள சூழ்நிலை பற்றி விவாதிப்பதற்காக இம் மாத இறுதியில் அமெரிக்கா இந்த இரு நாடுகளுடனும் தனித்தனியே பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறது.

இம் மாதம் 23 ஆம் திகதி இந்தியாவுடன் பேச்சு வார்த்தை வாஷிங்டனில் நடைபெறும்.

பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைகள் லண்டனில் இம் மாதம் 25 ஆம் திகதி நடைபெறும்.

பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து சில முக்கியமான முடிவுகள் எட்டப்பட இருப்பதால் பேச்சு வார்த்தைகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-8)

## எச்சரிக்கை

எல்லைப்பதற்றங்களை தன்னால் பொறுத்துக் கொள்ள இயலாது என்று தலிபானுக்கு ஈரான் எச்சரித்திருக்கிறது.

தலிபானை அமெரிக்கா ஆதரிப்பதையும் ஈரான் குறைகூறி உள்ளது.

அதேசமயம் சென்றவாரம் தலிபான் படைகள் கடத்திச் சென்ற 10 ஈரானிய அரசாங்க பிரதிநிதிகளையும், பத்திரிகையாளர் ஒருவரையும் விடுதலை செய்யும் முயற்சிகளை ஈரான் தொடர்ந்து மேற்கொள்ளும் என்று ஈரான் அதிபர் முகமட் கதாமி தெரிவித்துள்ளார். (இ-8)

## நிர்ப்பந்தத்தாலேயே மண்டேலா திருமணம்

மபுடோ, ஓக: 18

நண்பர்களின் நிர்ப்பந்தத்தால் தான் திருமணம் செய்து கொண்டோம் என்று தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா (வயது 80) கிரேசா மசேல் (வயது 52) இருவரும் தெரிவித்தனர்.

மொசாம்பிக் நாட்டின் மபுடோ நகரில் செய்தியாளருக்கு கூட்டாக அளித்த பேட்டியில் இதை அவர்கள் தெரிவித்தனர்.

கிரேசாவுடன் நட்புடன் பழகி வந்தேன். பார்க்கும் நண்பர்கள் எல்லாம் கிரேசாவை எப்போது திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள் என்றே கேட்டார்கள். நாடாளுமன்றத்துக்குச் சென்றால் உறுப்பினர்களும் அதையே கேட்டார்கள். உறவினர்கள், நண்பர்கள் தெரிந்தவர்கள், முதல்முறையாகப் பார்க்க வருகிறவர்கள் என்று எல்லோரும்

### உலக அரங்கில்

இதே கேள்வியைக் கேட்டுத் துளைத்ததால் சரி திருமணம் செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்தேன் என்றார் மண்டேலா.

மண்டேலா இந்த முடிவுக்கு வந்தாலும் கிரேசா தயாராக இல்லை. மொசாம்பிக் அதிபரின் மனைவி என்ற வகையில் அந்நாட்டு அரசியலிலும் சமூக நலப் பணிகளிலும் அவர் தீவிர அக்கறை காட்டி வந்தார். யுத்தங்களினால் குழந்தைகளுக்கு ஏற்படும் இன்னல்கள், நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவது ஆகியவற்றுக்கு அவர் முக்கியத்துவம் தந்து வந்தார். எனவே திருமணத்துக்கு அவர் உடனடியாக ஒப்புக் கொள்ளவில்லை. அவர் ஒப்புதல் தந்தபிறகு உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் திருமண நாள் குறித்து முன் கூட்டியே தகவல் தரவும் ஏற்பாடுகளைச் செய்யவும் போதிய நேர அவகாசம் இல்லாமல் போய் விட்டது.

மேலும் இத்திருமண முடிவை ரகசியமாக வைத்திருக்கவே மண்டேலா விரும்பினார். உலகம் முழுவதும் உள்ள தமது நண்பர்களுக்கு இது தெரியவந்தால் தென்ஆபிரிக்க வீதிகள் அனைத்தும் வாகன நெரிசலால் திணறும் என்பதால் அவர் முன்கூட்டியே அதைத் தெரிவிக்க விரும்பவில்லை.

திருமணத்துக்குப் பிறகு மசேல் என்ற பெயரைத் தொடர்ந்து வைத்துக் கொள்ள கிரேசா முடிவு செய்திருக்கிறார். இதை பெண் சுதந்திரத்துக்கு அடையாளம் என்று கூறி பெண்ணியல்வாதிகள் பாராட்டுகின்றனர். (இ-10)

## கைதான அராபியர் கென்யாவிடம் ஒப்படைப்பு

இஸ்லாமாபாத், ஓக. 18

நைரோபிக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் முகமத் சித்தீக் என்பவர் பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் பாகிஸ்தான் பொலிஸாரால் கென்யா நாட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கென்யாவிலும், தன்சானியாவிலும் அமெரிக்க தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் முகப்மத்சிதீத் ஓர் அராபியர் ஆவார்.

இவர் கடந்த 7 ஆம் திகதி நைரோபியிலிருந்து வந்த போது பாகிஸ்தான் பொலிஸாரால் கராச்சியில் வைத்து கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)

## காவிரிப் பேச்சுவார்த்தை:

## கருணாநிதி பங்கு பற்ற மூப்பனார் காரணமா?

தமிழ் மாநிலக் காங்கிரஸின் வற்புறுத்தலினாலேயே காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக புதுடில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் முதலமைச்சர் மு. கருணாநிதி கலந்து கொண்டதாக முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கூறியதாக சொல்லப்படுவதற்கு முதலமைச்சர் வன்மையாக ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

சிதம்பரம் இக் கருத்தைக் கூறியதற்கு த. மா. கா. விடமிருந்து தாம் விளக்கம் கேட்கப் போவதாக திண்டுக்கலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண தாம் தொடர்ந்து முயற்சி செய்யப் போவதாகவும் கருணாநிதி கூறினார். (இ-8)

## லேசர் கதிர்மூலம் செலுத்தும் விண்கலம்!

கேப்கனரவேல், ஓக: 18

'லேஸர்' கதிர் மூலம் தரையில் இருந்து விண்வெளிக்குச் செலுத்தும் விண்கலத்தை உருவாக்குவதில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விண்கலத்தில் எரிபொருள் இருக்காது. தரையில் இருந்து பாய்ச்சப்படும் லேஸர் கதிர் இதனை இயக்கிச் செலுத்தும்.

விண்வெளிக்கு மனிதர்கள் பயணம் செய்வதற்கான செலவைக் குறைக்கும் நோக்கில் இந்த விண்கலம் தயாரிக்கப் படுகிறது. இன்னும் 5 ஆண்டுகளில் இந்த விண்கலம் செலுத்தப்படும். (ஐ)

## கொங்கோவிலிருந்த பிரஜைகளை ஹோலந்து வெளிக்கொணர்ந்தது

கின்ஸாசா, ஓக: 18

கொங்கோ ஜனநாயகக் குடியரசிலிருந்து ஹோலந்து அரசாங்கம் தனது பிரஜைகளை வெளிக்கொணர்ந்தது.

சுமார் 20 ஹோலந்துப் பிரஜைகளும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளும் தலைநகர் கின்ஸாசாவிலிருந்து அருகிலுள்ள கொங்கோ குடியரசின் தலை நகருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

கொங்கோ நதி வழியாக படகில் இவர் சென்றனர்.

விமான மூலம் இவர்களை மீட்பதற்கு மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததால் ஐரோப்பிய ஒன்றியம் இந்தப் படகை வாடகைக்கு அமர்த்தியது.

அதே சமயம் கொங்கோ ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி லோறன்ஸ் கபீலா லுபும்பா நகரில் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துவதாக அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

கபீலாவின் ஆட்சியை எதிர்த்துப் போராடும் கிளர்ச்சிவாதிகள் கின்ஸாசாவை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாட்டின் கிழக்குப் பகுதியின் பெரும் பிரதேசத்தையும், தென் மேற்கின் சில முக்கிய நகரங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பமான இந்த சிவில் யுத்தம் காரணமாக நாட்டின் மூன்றில் இரண்டு பகுதியைக் கிளர்ச்சித் தலைவர்கள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். (இ-8)

★ மங்களகரமான திறப்பு விழா ★

மெடி எயிட்ஸ் நிறுவனத்தாரின் மற்றுமொரு மகத்தான சேவை

**TELE LINK COMMUNICATION SERVICE**

ரெலி லிங்க் கொமியூனிகேஷன் சேவிஸ்

(நல்லூர்க் கந்தசாமி கோயில் முன்பாக)

CODE NO. 021 TELE PHONE NO. 2183

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவை

நாளை 19-8-1998 காலை 6-04 தொடக்கம் 8-20 (S. L. T.)

வரையிலுள்ள சுபநேரத்தில் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

உரிமையாளர்: மெடி எயிட்ஸ்

நல்லூர்.

(58452)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுன்னாகம் குளிரருவி, சித்திரகலா, தளபாடங்கள் அலுமினிய பீடிங் கவுண்டர், சோக்கேஸ், அலுமாரிகள், எயர்க்கண்டிசன் குவாட்டா ஜெனரேட்டர், செற்றிகள், கதிரை மேசை, வோசிங் மெசின், A - 40 பரீனா காரும் வேறும்பல வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. உடுவில் பெண்கள் பாடசாலை அருகில் தபாற்கந்தோர் முன்பாக மானிப்பாய் வீதி, உடுவில். (58377)

பைனியர் டபிள்கசற் பிளேயர் And, CD, Radio, Vidio CD உம் பொருத்தக் கூடியது. றெக்கோடிங் பாரிற்கு உகந்தது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். க. அழகரத்தினம், நீர்வேலி கந்தசாமி கோயில் வடக்கு வீதி. (58444)

### O/L விஞ்ஞானம் 98

பயிற்றப்பட்ட ஆசிரியரால் உங்கள் வீட்டிலேயே (யாழ். நகரப் பகுதிகளில்) பரீட்சைக்கு தயார்படுத்தப்படும். முகவரி: திரு A. Sellathurai, Mudakadu Karaveddy (58386)

### திருமண சேவை

சாயி மங்கள திருமண சேவையில் பல ஆண்டு காலமாக உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் திருமணங்களை நிறைவேற்றி முன்னோடியாக விளங்குகின்றது. உங்களுக்கு மணமகள், மணமகன் தேவைப்படின் சாதகக்குறிப்பு, குடும்ப விவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். V. மகேந்திரன் 27, இராஜசிங்கா றோட், வெள்ளவத்தை, Colombo-06. (58367)

### மூக்குக்கண்ணாடி

திருநெல்வேலி சந்திக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் எனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருநெல்வேலி சந்தை சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் அல்லது 233, கச்சேரி நல்லூர்வீதி எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (58436)

### புறொயிலர் குஞ்சுகள்

18. 08. 98 செவ்வாய்க்கிழமை 1 நாள் புறொயிலர் குஞ்சுகள் வருகிறது. பதிவு செய்தவர்களும் ஏனையோரும் வந்து பெற்றுக் கொள்ளவும். இடம் Lucky, Farm House, Mathavady Lane, Palaly Road, Thirunalvely. (58442)

### தவறிவிட்டது

தர்மரட்ணம் பிரதீபன் ஆகிய நான் எனது கைச் சங்கிலியை புத்தூர் சந்திக்கும், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் தவற விட்டுவிட்டேன். கண்டெடுத்தவர் சபேசன் BMC உடன்தொடர் கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (58445)

## பொதுச்சபைக் கூட்டம்

தென்மராட்சி, ஒக. 18

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை பிரதிநிதிகளின் கூட்டம் அண்மையில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் சி. ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது. (இ-17)

---

## இல்லற வெள்ளிவிழா வாழ்த்து

யாழ்ப்பாணம் பாசையூரைச் சேர்ந்த

**பிறின்ஸ் - யூலியானா**

**தம்பதிகள்**

18 - 08 - 98 இன்று

தமது இல்லற வாழ்வின் இருபத்தைந்தாவது ஆண்டை நிறைவு செய்கின்றார்கள். துறவறத்தால் மட்டுமல்ல இல்லறத்தாலும் இறைபணி ஆற்ற முடியும் என்ற உண்மைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து கொண்டிருக்கும் இத்தம்பதிகள் தமது பொன் விழா, பவள விழா போன்றவற்றையும் கண்டு நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்தி இறை ஆசியை வேண்டுகின்றோம்.

அன்பியக் குடும்பத்தினர்

இரண்டாம் குறுக்கு வீதி,
பாசையூர். (58489)

---

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை

**கரவெட்டி**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் 26-08-98 ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு கேள்விச் சபையால் திறக்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களே கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையவர் ஆவார்.

கேள்விப் பத்திரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தலைமைச் செயலகத்தில் 24 - 08 – 98 ஆம் திகதி பிற்பகல் 1 மணிவரை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேள்விப் பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்தியதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. தச்சன்தோப்பு வீதி | 250/- | 1,000/- |
| 2. உடுப்பிட்டிச் சந்தைவீதி | 250/- | 1,000/- |
| 3. நெல்லியடி ஆயுள்வேத வைத்தியசாலை புனரமைப்பு | 250/- | 1,500/- |

மேலதிக விவரங்களை இப் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் வேலை நாள்களில் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
13 – 08 – 98. (சி/4584)

---

## நல்லூர்-கோப்பாய்

## லயன்ஸ் கழகங்கள்

மாவட்ட தலைவர் (நீரிழிவு-சுகாதாரம்) 98/99
ஏற்பாட்டில்
மருத்துவபீட மாணவர்களுடன்
இணைந்து நடத்தும்

## இலவச மருத்துவ பரிசோதனை வைத்திய ஆலோசனை முகாம்

பருத்தித்துறை வீதி,
நல்லூர் பழைய பொலீஸ் நிலையம் முன்பாக

திகதி: 18 . 08 . 98 முதல்
19, 20, 21 22 . 08 . 98 வரை.
காலை 9. 00 - 12. 00
பி.பகல் 3. 00 - 5. 00 வரை

அனைவரையும் பங்குபற்றி பயன்பெற வேண்டுகிறோம்.

லயன் பா. தவபாலன்
தலைவர் லயன்ஸ் கழகம்,
நல்லூர்.

லயன் க. செல்வரட்ணம்
தலைவர் லயன்ஸ் கழகம்,
கோப்பாய்.

விளம்பர உதவி:
**எஸ். எம். பெர்னாண்டோ**
இல. 580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/4583)

---

புத்தூர் - மணற்பகுதி
கலையகம் ச. ச. நிலையம்
வீனஸ் விளையாட்டுக்கழக பொன்விழாவை
முன்னிட்டு

**நியூலலிதா நகைமாடம்**

ஆதரவில்
170, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியும் மரதன் ஓட்டப் போட்டியும்

இடம்: ஆவரங்கால் சிவன்கோவில் மேற்கு வீதியில்

காலம்: 23 – 08 98 ஞாயிறு காலை 6-30 மணி.

**21-08-98** வெள்ளிக்கிழமையிலிருந்து போட்டித் தினம் காலை வரை மேற்படி நிலையப் பணிமனையில் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

முக்கிய குறிப்பு:

சைக்கிளின் பற்சக்கரங்களின் பெரிய சில்லு 48 பற்களையும், சிறிய சில்லு 18 பற்களையும் கொண்டிருத்தல் வேண்டும். மற்றைய விவரங்களை நிலையத்தில் பெறலாம்.

— செயலாளர்.

அனுமதிக் கட்டணம்: ரூபா 100

(58446)

---

உ
சக்தி துணை

## திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள்
3 ஆம் நாள் (19 08-1998) புதன்கிழமை
காலை 6-30 மணி முதல் 7-40 மணிவரையுள்ள
கடக லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

## நரேன் வீடியோ
## Naren Video

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து தங்களை மகிழ்விக்க இருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

ந. சண்முகரத்தினக்குருக்கள்

வீரமாகாளி
அம்மன் கோவிலடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-4586)

---

## கண்ணீர் அஞ்சலி

எனது ஆசானாகவும்
எனது ஆசாரியா அபிஷேகத்தின் ஆச்சாரிய
சிவாச்சாரியாராகவும் இருந்த

நியாயசிரோமணி வித்தியாசாகரம்

## பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரி

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு வழக்கம்பரை முத்துமாரி அம்பாளை அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்தித்தும் அமரரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியும் எனது இதய பூர்வமான அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

சிவஸ்ரீ சு. சுந்தரராசக் குருக்கள்
வழக்கம்பரை அம்பாள் தேவஸ்தானம்

தொல்புரம்,
சுழிபுரம். (58450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டிலிப்பாய் செயலர் பிரிவில்

# 7, 256 குடும்பங்களுக்கு ரூ. 5, 000

வலி. தென்மேற்கு, ஒக. 18
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 7 ஆயிரத்து 256 குடும்பங்களுக்கு இதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருவதாகவும்-

விரைவில் அடுத்த கட்டம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு தவறவிடப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கும் கொடுப்பனவு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-185)

## கல்வியங்காட்டில் லயன்ஸ் சிகிச்சை முகாம்

கல்வியங்காடு பொதுச் சந்தையில் அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் நேற்று முன்தினம் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. சுமார் 150 பேருக்கு நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்களான டாக்டர் பிரதீப்குமார், டாக்டர் திருமாறன் மற்றும் மருத்துவ மாணவர்கள் பலரும் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர்.

நல்லூர் லயன்ஸ் கழக தலைவர் லயன் ப. தவபாலன், வன்னியசிங்கம் பொதுப்பணிமன்ற நிர்வாக உறுப்பினர் லயன் இ. இராஜகுலேந்திரன் ஆகியோர் இந்த மருத்துவ பரிசோதனை முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

எதிர்வரும் ஞாயிறன்று இதே இடத்தில் இலவச கண்பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட உள்ளன.

(ஐ)

## வெடிப்பொருள் எதுவும் கப்பலில் இருக்கவில்லை

### கப்பல் கப்டன் தெரிவித்தார்

வவுனியா, ஒக. 18
எமது கப்பலில் பாதுகாப்புத்துறை தொடர்பான எந்த விதமான பொருள்களோ, வெடிப்பொருள்களோ இருக்கவில்லை — வெறும் உணவு மற்றும் வாகனங்களான உழவு இயந்திரம், ஸ்கூட்டர் என்பனவே இருந்தன.

மேற்கண்டவாறு 'பிரின்ஸஸ் காஷ்' கப்பலின் மாலுமியான வி. என். காக்ரே செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்ததாக வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலிருந்து முதன் முதலாக பருத்தித்துறை நோக்கி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு எமது கப்பல் புறப்பட்டது.

அதில் எந்த விதமான வெடிமருந்துப்பொருள்களும் இருக்கவில்லை.

விமானக் குண்டு வீச்சில் இருந்து எங்களது உயிரைப் பாதுகாத்தவர்கள் விடுதலைப்புலிகளே. எமக்கு சகல வசதிகளையும் அவர்கள் ஏற்படுத்தித்தந்தனர்.

விடுதலைப் புலிகளது பராமரிப்பில் இருக்கும்போது ஒரு ஐந்து நட்சத்திரக் ஹோட்டலில் இருப்பது போன்ற உணர்வே எமக்கு ஏற்பட்டது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)

## சிறுவர்களுக்கு லயன்ஸ் கழகம் உதவி

யாழ்ப்பாணம், ஒக. 18
நல்லூரில் உள்ள யாழ். மாநகரசபை பாலர் பாடசாலையில் கல்விகற்கும் தந்தையை இழந்த மற்றும் வறிய மாணவர்களுக்கு நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் இலவச தண்ணீர் கான்களை (ட்ரிங் பொட்டில்) வழங்கியுள்ளனர்.

எதிர் காலத்தில் பாடசாலை உபகரணங்கள், செருப்பு, புத்தகப்பை, பாலர்களின் போஷாக்கு குறைபாட்டை நீக்க இலைக்கஞ்சி, இலவச மருத்துவப் பரிசோதனை ஆகியவற்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக நல்லூர் லயன்ஸ்கழக தலைவர் லயன் பா. தவபாலன் தெரிவித்துள்ளார்.

(ஐ-8)

## பாவனைக்காலம் முடியுமுன் பழுதடைந்த 'கன்டோஸ்'

### விற்பனை கண்டுபிடிப்பு

வலிகாமம் தெற்கு, ஒக. 18
காலம் முடிவடைவதற்கு போதிய நாள்கள் இருந்தும் கூட, சுன்னாகம் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்த "கன்டோஸ்" சொக்கிலேட்டுக்கள் பழுதடைந்து இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் செய்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து தெல்லிப்பழை சுகாதார பரிசோதகர் மேற்கொண்ட திடீர்பரிசோதனைகளின் போது பல வர்த்தக நிறுவனங்களின் இவ்வாறு பழுதடைந்த—மக்கள் பாவனைக்கு ஒவ்வாத — கன்டோஸ் சொக்கிலேட்டுக்கள் விற்பனைக்கிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

சொக்கிலேட் கவர்களில் அவற்றின் பாவனைக் காலம் 20-05-99 என அச்சிடப்பட்டிருந்தது. பரிசோதனைகளின் போது கவர்களினுள்ளே பூஞ்சணம்காணப்பட்டதால் அவை யாவும் பொதுச் சுகாதார உத்தியோகத்தரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இவ்வகையான சொக்கிலேட் வகைகள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென பொதுச்சுகாதார உத்தியோகத்தர் அறிவுறுத்தி உள்ளார்.

(ஐ-152)

## எலும்புக் கூடு கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஒக. 18
சாவகச்சேரி கச்சாயில் இருந்து கடந்த 14ஆம் திகதி யாழ். போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்ட எலும்புக் கூட்டை மேலதிக பரிசோதனைக்காக கொழும்பு ஆய்வுகூடத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை ஆஸ்பத்திரி நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

கோபால் எமிலி நோனா என்பவரே 13 நாள்களுக்கு முன் காணாமற் போய் எலும்புக்கூடாகக் கண்டெடுக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-139-15)

## வெடி விபத்தில் மரணம்

வவுனியா, ஒக. 18
வன்னி மாவட்டத்தில் தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் நிலாவண்ணன் (செல்வராசா யோகேஸ்வரன் யாழ்ப்பாணம்) என்ற விடுதலைப்புலி உறுப்பினர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

(இ-ரி)

## தெல்லிப்பழைப் பிரிவில்

## 'கன்டோஸ்' விற்பனை தற்காலிகமாகத் தடை!

வலிகாமம் தெற்கு, ஒக. 18
தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம், கந்தரோடை, ஏழாலை, மல்லாகம், அளவெட்டி, தெல்லிப்பழை ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் 'கன்டோஸ்', சொக்கிலேட்டுக்கள் விற்பதற்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பகுதி வர்த்தக நிறுவனங்கள் பலவற்றில் விற்பனைக்கிருந்த 'கன்டோஸ்', சொக்கிலேட்டுக்கள் பலவற்றில் பூஞ்சணம் புழுக்கள் காணப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட வகை கன்டோஸ்களை விற்பனை செய்வதற்கு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி தற்காலிக தடை பிறப்பித்துள்ளார்.

இதனை மீறி கன்டோஸ் விற்பனையில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

(ஐ-152)

## நகரில் மோசமான வீதிகள்

கொழும்புத்துறை, ஒக. 18
யாழ். நகரிலுள்ள பல வீதிகள் குண்டும் குழியுமாக காணப்படுகின்றன.

யாழ். குருநகர் 5 ஆம் குறுக்கு வீதி, ஓடக்கரை வீதி, [illegible] வீதி, [illegible] வீதி ஆகியவை இவற்றில் சில ஆகும்.

(இ-30)

# செய்திக் கொத்து

### பாடசாலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக. 18
கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவர்கள் ஒன்றிணைந்து வழங்கும் 'எங்கள் பாடசாலை நிகழ்வு' நாளை செவ்வாய் இரவு 8 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ். சேவையில் ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

### பரீட்சை முடிவு

குருநகர், ஒக. 18
அரச மாகாண கணக்குப் பதியுநர் சேவையில் உள்ளவர்களுக்காக நடத்தப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வடக்கு — கிழக்கு மாகாண உள்துறை அமைச்சினால் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-51)

### தேயிலை பைக்கட் விநியோகம்

குருநகர், ஒக. 18
யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கிளைகளில் அரைக் கிலோ தேயிலைப்பைக்கட் 92ரூபா 25 சதத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒருவருக்கு அரைக் கிலோ மட்டுமே விற்பனை செய்யப்படுவதனால் இதனை வாங்க மக்கள்முண்டியடித்து வருகின்றனர். (ஐ-51)

### செம்மணிக் குளம் புனரமைப்பு

திருநெல்வேலி, ஒக. 18
நல்லூர் கமநலச் சேவை கேந்திர நிலைய பிரதேசத்திலுள்ள செம்மணிக்குளம் ஆழமாக்கப்பட்டு வருகின்றது. நாயன்மார்க்கட்டு விவசாய சம்மேளனம் உலக உணவு நிறுவனத்தின் உதவியுடன் இக் குளத்தைப் புனரமைப்புச் செய்து வருகின்றது.

(ஐ-135)

### அடிக்கல் நடுகை

திருநெல்வேலி, ஒக. 18
நீர்வேலிதெற்கு ஒல்லை வேம்படி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இரண்டு இலட்சம் ரூபா செலவில் புதிய மணி மண்டபம் அமைக்கப்படவுள்ளது. எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆலய பரிபாலனசபைத் தலைவர் இதற்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார். நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குரு பிரம்மஸ்ரீ இராசக்குருக்கள், பிரம்மஸ்ரீ சோமதேவ சர்மா ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவார்கள். (ஐ-135-30)

### மதகு புனரமைப்பு

வலிகாமம்தெற்கு, ஒக. 18
நீண்டகாலமாக திருத்தப்படாமல் இடிந்த நிலையில் காணப்பட்ட மானிப்பாய் இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள மதகு, பெருந்தெருக்கள் திணைக்களத்தினரால் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இதேபோ[illegible]னிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு முன்உள்ள மதகு ஏற்கனவே பெருந்தெருக்கள் திணைக்களத்தினரால் புனரமைப்புச் செய்[illegible]ட(ள்ளது. (இ-152)

### மண்வெட்டி

வலிகாமம்தெற்கு, ஒக. 18
கந்தரோடை விவசாயிகள் சம்மேளனத்தில் உள்ள 35 விவசாயிகளுக்கு யாழ் ரக மண்வெட்டிகள் வழங்கப்பட உள்ளன.

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் வைத்து இவர்களுக்கான மண்வெட்டிகளை வழங்க கந்தரோடை கிராமசேவையாளர் திருநாவுக்கரசு நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-152)

### சுற்றாடல் சுகாதாரம் பாதிப்பு

சங்குவேலியில் அமைந்துள்ள கேலங்காமம் குளத்தை அண்டிய கிழக்கு வடக்கு பக்கமாக அமைந்துள்ள வயல் நிலங்களில் அதிகாலைவேளையில் மக்கள் தமது இயற்கைக் கடன்களைக் கழிப்பதால் வயற்பகுதிகளில் பகல் வேளையில் தோட்ட வேலைகள் செய்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்படிகுளத்தை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகளில் போதியளவு நீர் மலசலகூட வசதிகள் இருந்தும் அவற்றைத் தவிர்த்து வெளிநிலங்களில் இயற்கைக் கடன்களை கழிப்பதால் சுற்றாடல் சுகாதாரம் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-152)

### விவசாய நோக்கு

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன மாணவர் மன்றத்தினரால் "விவசாய நோக்கு" என்ற சஞ்சிகை அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இச்சஞ்சிகையில் விவசாயிகள், விவசாய பாடத்தை பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் போன்றோருக்கு உதவக்கூடிய பயனுள்ள பல கட்டுரைகள் காணப்படுகின்றன.

(இ-152)

### பரிசளிப்பு விழா

பருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை பரிசளிப்பு விழா அதிபர் திருமதி சீதாதேவி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி. ரி. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பி. எம். இம்மானுவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

திருமதி சாரதாதேவி செல்வரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

(இ-173)

### புலமைப்பரிசில் நிதியம்

பளை வேம்போடுகேணி பிரிவு முன்னாள் கிராம அலுவலர் பொ. விக்னேஸ்வரன் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதி பளை கல்வி அபிவிருத்தி அவையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெறும் மாணவருக்கு வருடாவருடம் இந்த நிதியிலிருந்து புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளதாக அவைச் செயலாளர் தெரிவித்தார்.

(இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

எமது மன்றத்தின் நீண்ட காலச்சேவையாளனும், ஈழத்தின் சிற்பக்கலைக்கு வலுவும், வனப்பும் சேர்க்கும் சிற்பச்சக்கரவர்த்தியும், கலா பூஷணம் விருது பெற்றவருமான

ஸ்தபதி

## ஆறுமுகம் ஜீவரத்தினம்

அவர்கள் அறுபதாண்டு அகவையைக் கொண்டாடும் இவ்வேளையிலே தொடர்ந்தும் கலையுலகில் பல சாதனைகள் படைத்து பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

- இளங்கலைஞர் மன்றம்.

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(58437)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 16 – 07 – 1979

உதிர்வு 05 – 07 – 1998

## செல்வி மருதநாயகம் சாந்தி

(குட்டா)

பாசமோடு எந்தநாளும் பாங்குடன்
வளர்த்தெடுத்தோம்
நேசமாய் எங்களோடு நீடுநாள் வாழ்ந்திருந்தாய்
வாசமே தந்திடாது வழிமாறிச் சென்றுவிட்டாய்
மோசமேன் செய்தாயம்மா! முடிவில் நீபெறுக
சாந்தி!

—குடும்பத்தினர்

தேவிவாசா
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை,

(58362)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 06 – 06 – 1949

உதிர்வு 18 – 08 – 1995

அமரர்

## றோமாம்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ்

(அப்புத்துரை)

அன்பின் தெய்வமே! அறிவின் சிகரமே! கணப்பொழுதில்
ஆறாத்துயரில் எம்மையெல்லாம் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் இதயக் கோயிலே!
பாசத்தை அள்ளி வீசிடும் போதிலே
காலனால் கவரப்பட்டு ஆண்டுகள் மூன்று ஆனாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டகலாது.
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

| | |
|---|---|
| தந்தை: | றோமாம்பிள்ளை, |
| மனைவி: | மேரிதிரேசா (மணி), |
| பிள்ளைகள்: | ரேவதி, அமலவதி, மில்டன், மெறினா, ஜெறினா, ரெஜினா, டெறினா, |
| மருமக்கள்: | அ. யேசு, இ. ராசன், பி. லெபோன், யா. மதியழகன், |
| பேரப்பிள்ளைகள்: | யே. லொறக்ஷன், யே. நிரீஜந்தன் ரா. அலிசா, ரா. சியானா, ரா. நிலைக்ஸன், |
| மாமா: | எமிலியாம்பிள்ளை, |
| மாமி: | கிறிஸ்னால். |
| | மச்சாள், மச்சான்மார், உற்றார், உறவினர்கள். |

மணல்காடு,
குடத்தனை.

(சி/ 4551)

# குளத்தைப் புனரமைக்கக் கோரிக்கை

மந்துவில் கிழக்குப் பகுதியில் உள்ள 300 – க்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் பாவனையில் உள்ள குழுக்களைக்குளத்தை மழைகாலம் ஆரம்பிக்கும் முன்னர் திருத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேச செயலரையும், பொது நிறுவனங்களையும் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

இப்பகுதி மக்களின் தொடர் பாவனையால் இக்குளம் விரைவில் தூர்ந்து போகும் அபாயம் ஏற்படலாமென மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ–17)

# லக்ஸ்பிறே விலை

நவாலி, ஒக. 18

வர்த்தகத் திணைக்களத்தில் 1 லக்ஸ்பிறேயின் விலை 86 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால் ப. நோ. கூ. சங்கங்களிலும் சில தனியார் கடைகளிலும் இதன் விலை 80 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (இ–100)

# வானிலிருந்து விழுந்து மாணவி காயம்

யாழ்ப்பாணம், ஒக. 18

ஓடிக்கொண்டிருந்த வானில் இருந்து அவசரமாக இறங்கிய மாணவி ஒருவர் விழுந்து படுகாயமடைந்தார்.

கொடிகாமத்தில் கடந்த சனிக்கிழமை நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வைத்திலிங்கம் நிஷாந்தினி வயது 15 என்ற, கொடிகாமம் நாவலடிப் பாடசாலையின் 11 ஆம் ஆண்டு மாணவியே காயம் அடைந்தவராவார்.

காலை தனியார் கல்வி நிறுவனமொன்றில் பாடம் கற்றுவிட்டு வீடு திரும்பிய வேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாக தாயாரால் தெரிவிக்கப்பட்டது.

வான் வீட்டுப்படலை கடந்து விட்டதால் அவசரமாக ஓடும் வானில் இருந்து இவர் இறங்க முற்பட்டதாகக் கூறப்படுகிறது.

தலையில் பலத்த காயம் அடைந்தவர் சுயநினைவிழந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(இ–139–117–15)

# பிரதேச செயலகம் முதலிடம்

வலி. தென்மேற்கு, ஒக. 18

மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

அண்மையில் யாழ். மாவட்ட பிரதேச செயலக பிரிவுக் கழகங்களுக்கு இடையிலான இந்த மெய்வன்மைப் போட்டிகள் தலைவர் து. வைத்திலிங்கம் தலைமையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கான சான்றிதழ்களையும், கேடயங்களையும் வழங்கினார்.

14 பிரதேச செயலகங்கள் பங்கு பற்றிய மெய்வன்மைப் போட்டியில் பல வருடங்களின் பின்னர் வலி. தென்மேற்கு பிரதேச செயலகம் முதலாம் இடம் பெற்றது [illegible]

# சந்திக்கவும்

**திரு. கீதநாதன்** அவர்கள்

வெதுப்பக போறணை திருத்த வேலை தொடர்பாக எம்மை உடன் வந்து சந்திக்கவும்.

பொது முகாமையாளர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(58443)

# மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

இடம்: மூளாய் - பொன்னாலைக் குளம்.
காலம்: 23 - 08 - 98 பி. ப. 1. 00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் ரூபா 10

நடத்துனர் = தம்பா

(சி/4582)

# தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை

பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## 'தனிநடிப்பு' கலைநிகழ்வும் ஒன்று கூடலும்

இடம்: பாடசாலை மண்டபம்.
காலம்: 19 - 08 - 98 புதன் காலை 10.00 மணி

கலை நிகழ்வை அழகு செய்யும் கலைஞர்கள்:
சோலைக்குயில் அவைக் காற்று களத்தைச் சேர்ந்த
கிருபா, கௌந்தினி, பாரதி, ரமணி, இந்து, தீபன், சகஜா, கலைவாணி கவிதா, தர்ஷா

நெறியாள்கை: மாலை பாரதி

பெற்றோர், பழைய மாணவர் அனைவரும் வருக, ஒரு காலைப் பொழுதில் மனம் நிறைந்து மகிழ.

கோகிலா மகேந்திரன்
தலைவர்

அருள் துளசி
இணைச் செயலர்

[58438]

தெல்லிப்பழை.

உ

# சிவாச்சார்யாபிஷேக தீக்ஷாமந்திர உபதேச அழைப்பு

(குருப்பட்டம் வழங்கல்)

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 4 ஆம் திகதி (20 – 8 - 98) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் வரும் பூசநட்சத்திரமும் சிம்மலக்கினமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

சிவப்பிரம்மஸ்ரீ

சொக்கநாத இரத்தினசபாபதிக்குருக்களின்

ஏகபுத்திரன்

## விக்கினேஸ்வர சர்மா (சங்கர்)

அவர்களுக்கு

சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை சிவாச்சார்யாபிஷேகம் செய்ய சொர்ண சித்தி விநாயகர் மங்களமகாகாளி அருளோடு திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் தம்பதிகள் சமேதராக வருகைதந்து செல்வனை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

முகூர்த்தம்: 20 - 8 – 98 வியாழக்கிழமை காலை 7.00 — 7.55 மணிவரை.

முகூர்த்த இடம்: புதுக்கோவிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தீட்சாகுரு: சிவப்பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள் (மட்டுவில்).

முகூர்த்த நிர்ணயம்: சாதகர்குரு வித்தியாகுரு சிவப்பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் (இணுவில்).

வித்தியாகுரு: சிவப்பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா (மட்டுவில்).

முக்கிய குறிப்பு: இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை விரும்பும்:
சிவப்பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள்
சம்பூர்ணவல்லி தம்பதிகளும், பிள்ளைகளும்.

வரவேற்பாளர்கள்
பாஸ்கரசர்மா காஞ்சனா தம்பதிகள் (யாழ்.)
பாலபாஸ்கரசர்மா கோமளா தம்பதிகள் (பொன்னாலை)
ஸ்ரீதரசர்மா ரேணுகா தம்பதிகள் (மொறிசியஸ்)

(58420)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முன்னும் பின்னும்

இலங்கை இனப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் போர் ஒரு தீர்வாகமாட்டாது. அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வர வேண்டும்—

இதுவரை முன்வைக்கப்பட்ட எந்தத் தீர்வுத் திட்டமும் திருப்திகரமானதாக இருக்கவில்லை. இரு புறத்தினருமே இவற்றை நிராகரித்துவிட்டனர். இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை இழந்துள்ளனர். தொடர்ந்தும் இந்தப் போர் முன்னெடுக்கப்படுமானால் இந்த நாட்டைப் பேரழிவில் இருந்து காப்பாற்ற முடியாது—

இவ்வாறு தெரிவித்தவர் இந்தியாவின் முன்னாள் அமைச்சரும் நிரந்தர தொழிற்சங்க வாதியுமான இந்திரஜித் குப்தா ஆவார்.

அவர் பெரிதாக, விசேடமாக, பரபரப்பாக எதனையும் கூறவில்லை. உள்ளதையே, உண்மையையே சொல்லியுள்ளார். எல்லோருக்கும் தெரிந்த ஒன்றையே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் மக்களில் மிகப் பலருக்கும், அரசியல்வாதிகளுக்கும், சமாதான விரும்பிகளுக்கும் தெரிந்த இந்த உண்மை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தெரியாதது அல்ல.

ஏனையோர் கருதுவது போல, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென முன்வைக்கப்பட்ட அதிகாரப் பரவல் தீர்வுப் பொதியை அரசாங்கம் பின்னால் தள்ளிவிடவில்லை என்று ஜனாதிபதி கூறிய போதிலும்—

போரைத் தொடர்வதற்காக மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைத்திருக்கிறார். மேலும், இப்போது நடைபெறும் போரின் பிரதான சமர்க்களமான வன்னியில் பாதை திறக்கும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் வெற்றி கண்ட பின்னரே ஒத்தி வைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்றும் அமைச்சர்கள் தெரிவிக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி, பரஸ்பரம் நம்பிக்கை இழந்துள்ள தாமும் புலிகளும் பேசுவதற்கு மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்; தொடர்பாளருடன் சமாளிக்க நினைக்கிறார். தொடர்பாளரின் மூலம் பேசுவதானாலும் விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு வரவேண்டும் என்பது அவரின் நிபந்தனை.

அந்த நிபந்தனை மூலம் பேச்சுவார்த்தைக்கு மறைமுகமான நிராகரிப்பைத் தெரிவித்துள்ளார்; அவ்வளவுதான்!

பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவது, பேச்சுவார்த்தை முயற்சியில் இறங்குவது, போரை நிறுத்துவது ஆகிய மூன்று செயற்பாடுகளையும் முனைப்புடன் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அரசினுடையதே. ஆனால் அரசு அவ்விதமின்றி போரைத் தொடர்ந்து, தேர்தலை ஒத்திவைத்துப் பெரும் சமருக்குக் கட்டியம் கூறியல்லவா நிற்கிறது?

# குடாநாட்டில் பெருகும் திருட்டுகள்; தடுக்க உதவியற்ற நிலையில் மக்கள்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் திருட்டுக்கள் மலிந்துள்ளன. எவ்வளவோ கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும்மக்களின் உடைமைகளை மிகவும் தந்திரமாக சூறையாடுவதில் விஷமிகள் பலரும் ஈடுபட்டுவருகின்றனர். அதனால் திருடர் தொல்லை குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அதிகரித்து வருகின்றது.

வேலைவாய்ப்பு, சுய

### செய்தி மடல்

தொழில் மற்றும் நாளாந்த கூலிவேலைதானும் இன்றி குடும்பவாழ்க்கையை நடத்தி வரும் மக்களின் பாவனைப் பொருள்களைக் கூடத் திருடர்கள் அபகரித்துச் செல்கிறார்கள் என்றால் திருட்டின் இனபரிமாணத்தைப் கற்பனை செய்து பார்க்கலாம்.

கடந்த 1995ஆம்ஆண்டுக்கு முன்னர் அரசின் சிவில் நிர்வாகம் அமுலில் இல்லாத வேளையில்திருட்டுச்சம்பவங்கள் குறைந்து காணப்பட்டது எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். இதற்குக்காரணம் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொது அமைப்புக்கள் விழிப்புக்குழு போன்றவற்றை அமைத்து இரவு நேரங்களில் செயல்படுத்தியதேஎனலாம். திருடர்களின் முயற்சிகள் அப்பொழுது கைகூடவில்லை. திருடினால் தண்டனை கிடைக்கும் என்ற அச்சமும் அதற்கு முக்கிய காரணமாகும்.

தற்போது ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில், ஊரடங்கைப் பயன்படுத்தி விஷமிகள் பலர் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதை அறியமுடிகிறது.

ஊரடங்குச் சட்ட நேரத்தில் வீடு ஒன்றுக்குள் புகுந்து திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடும் திருடர்கள் ''ரோச்லைற்''றை வீட்டுக்காரரின் முகத்தின் மேல் பாய்ச்சி, சத்தம் போடக் கூடாது, சத்தம் போட்டால் சுடுவோம், கத்தியால் குத்துவோம் என்று பயமுறுத்தி மிகவும் தந்திரமாகத் திருடிச் செல்கின்றனர்.

இதனைவிட வீட்டுக்காரரின் கண்கள் மீது ஒரு வகை வெள்ளை நிறத்தூளை வீசி அவர்களை ஆழ்ந்து உறங்கச் செய்து விட்டுக் கொள்ளையடித்துச்செல்கின்றனர். வீட்டுக்காரர் ஐயோ ''கள்வன்'', ''கள்ளன்'' என்று கூக்குரல் போட்டும் அயல் வீட்டுக்காரர் பயத்தினால் கதவைத் திறப்பதில்லை.

ஊரடங்குச் சட்ட நேரத்தில் வீட்டுக்கு வெளியால் கூடவர முடியாது என்ற நிலையினாலும் மக்கள் வீட்டுக்குள்ளேயே இருப்பதனாலும் திருடர்கள் வெற்றிகரமாக பொதுமக்களின் உடைமைகளைத் திருடிச்சென்று விடுகிறார்கள்.

குடாநாட்டில் தற்போது அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்களுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதே பொதுமக்களின் இன்றைய கேள்வியாகி உள்ளது.

சில பகுதிகளில் பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் இரவு ரோந்துகள் இல்லாத சமயத்திலேயே திருடர்களும் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

மற்றும் சில இடங்களில் இரவு நேரங்களில் நாய்கள் கடுமையாகக் குரைப்பதைக் கேட்டு இராணுவத்தினர் ரோந்து போவதாக எண்ணி மக்கள் அச்சத்துடனும் பதற்றத்துடனும் இருக்க பின்பக்கத்தால் திருடர்களே இராணுவம் போன்று நடித்துத் திருடுவதும் இப்போதைய பாணியாகிவிட்டது.

### தொடர்ச்சியான திருட்டுக்கள்

யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதிகளான ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம், சுண்டுக்குளி, கொழும்புத்துறை மேற்கு, நல்லூர், திருநெல்வேலி போன்ற பகுதிகளில் தொடர்ச்சியான திருட்டுக்கள் இடம் பெற்று வருகின்றன.

இன்றைக்கு ஒரு வீடு என்றால் நாளைக்கு இன்னொரு வீடு என்ற ரீதியில் திருட்டுக்கள் நடத்தப்படுகின்றன.

நிம்மதியாக உறங்கவும் நொந்து போன மக்களின் உடைமைகளை பாதுகாக்கவும் உருப்படியான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மக்கள் பலரும் கேட்கிறார்கள்.

ஆள்கள் இன்றி — குடியிருப்பாளர் இன்றி — இருக்கும் வீடுகளில் உள்ள தளபாடங்கள் மற்றும் கூரை ஓடுகள் போன்றவற்றைக் களவாடும் கோஷ்டிகளுக்கும் குறைவில்லை.

தமது வீடுகளில் இருக்கும் பொருள்கள் பவுத்திரமாக இருக்கும் என்று எண்ணியவாறு வேறு மாவட்டங்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களின் வீட்டு உடைமைகளை திருட்டுக் கோஷ்டியினர் திட்டமிட்டுத் திருடுகின்றனர்.

நகரில் மட்டுமன்றி குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் குடியிருப்பாளர் இல்லாத வீடுகளிலும், மக்கள்

## சூழ்நிலை எல்லாவற்றாலும் குற்றவாளிகளுக்கே சாதகமாகிறது

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இரவு நேரங்களில் ஒரு நிமிட உறக்கமும் இன்றிப் பீதியுடன் நேரத்தைக் கழிக்கின்றனர் விழித்திருந்தும் வெளியே வர அஞ்சுவதைச் சாதகமாக்கி கோழிகள், கால்நடைகள் மற்றும் வீட்டு உடைமைகளைத் திருடிச் செல்கின்றனர் திருடர்கள்.

### திருடர் பிடிபட்டார்

அண்மையில் கொழும்புத்துறைப் பகுதியில் இரவு 11 மணியளவில் களவாடுவதற்கு வந்த கோஷ்டியினரில் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். மற்றையவர்கள் தப்பி ஓடிவிட்டனர். பிடிபட்ட நபருக்கு மக்களால் நல்ல ''பூசை'' வழங்கப்பட்டு இப்பகுதி இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டார். பிடிபட்ட திருடனை விசாரித்த இராணுவத்தினரும நல்ல ''பூசை'',யும் வழங்கி அடுத்த நாள் அந்த நபரை விடுதலையும் செய்தனர்.

பல சந்தர்ப்பங்களில் பொருள்களை இழந்தவர்கள் பொலீஸாரிடம் முறைப்பாடும் செய்துள்ள போதிலும் திருடர்கள் அகப்படவில்லை. விசாரணைகளும் முழுமையாக நடந்ததாக இல்லை.

இரவு நேரங்களில் மக்கள் வசிக்கும் வீடுகளிலும் திருட்டுச் சம்பவங்கள் நிறைய நடைபெறுகின்றன.

ஒவ்வொருவரும் தமக்கு திருடர்களைக் கண்டு பிடிக்கவோ, அவர்களைத் தண்டிக்கவோ, எதுவும் செய்ய முடியாத, எவரின் உதவியுமற்ற நிலையில் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். வேண்டிய பொருள்களை — உடைமைகளை — பாடுபட்டு உழைத்த பணத்தைக் கொண்டே கொள்வனவு செய்கின்றனர் என்பதனை உணராமல் உண்மையான திருடர்களும் உள்வீட்டுக் கள்வர்களும் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

இவர்களை இனங்கண்டு கண்டுபிடித்துத் தண்டித்தால் மட்டுமே நிலைமை சீர்திருந்தும். அதனைச் செய்வது யார்?

**நந்தன்**

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### அல்லல் துடைத்தே அருள்!

தொல்லை வினைகள் தொடராது காக்கின்ற
நல்லைக் குமராவிந் நாட்டினிலே — எல்லவரும்
எல்லை இலாவின்பம் எய்துதற்காய் வேண்டுகிறேன்
அல்லல் துடைத்தே அருள்!

கந்தா கடம்பா கதிர்வேல் நறுங்குமரா
தந்தைக் குபதேசம் தந்திட்ட - மைந்தாநீ
வந்தனையே செய்கின்றேன் வண்ணமயில் மீதேறி
வந்தருள்க என்றும் மகிழ்ந்து!

= பொலிகை ச. திருப்பதி

### தமிழர் வாழ்வு விடிவுபெற...

வெந்தணலில் வேகுகின்ற எம் தமிழர் வாழ்வு
வெவ்வினையால் விளைந்ததுவோ யாரறிவார்
வெவ்வினை நீங்கி எம் தமிழர் விடிவு பெற
வெவ்வேல் ஏந்தியுமே வந்தெ(ம்)மைக் காத்திடுவாய்

அறவாழ்வு எம் மண்ணில் தழைத்திட வேண்டும்
மறங்கடிந்து எம்மவரைக் காத்திட வேண்டும்;
இறவாத வரம் பெற்று உன்னையே என்றும்
மறவாது நாவாரத் துதித்திட வேண்டுமையா?

- 'யாழோன்'

### உதய வாக்கு

அன்பு செய்யும் வரை மனிதன் ஒழுக்கக் கேடுடையவனாக முடியாது.


—சார்லஸ்ஹாம்

## வடிகால்களை புனரமைக்கக் கோரிக்கை

குருநகர், ஒக. 18

குருநகர்ப் பகுதியில் சேதமடைந்துள்ள வடிகால்கள், மதகுகள் மற்றும் வீதிகளை மழைகாலம் தொடங்குவதற்கு முன்னர் திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாநகர சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் மு. எட்வேட் யாழ். மாநகர சபையில் நடைபெற்ற மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

(இ—51)



### நல்லூரான் திருப்பாதம் காப்பு

அங்குமிங்கும் எங்குந் திருக்கூத்து அடடா
அதையறியதல் பத்தரைப் பொன் மாற்று

நல்லூரான் திருப்பாதம் - அடடா
நமக்குக் குறைவில்லை நல்லவாக்கு

- யோகர் சுவாமிகள்

### நாளை

ஆவணி - 03
புதன்கிழமை
திதி: துவாதசி
முற்பகல் 8.44 வரை
நட்சத்திரம்: புனர்பூசம்
முன்இரவு 10.22 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 04.35 06.05
ராகுகாலம்: 12.05 - 1.35
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை செய்யப்பட்ட 27 பேர் பற்றிய விவரம்

யாழ்ப்பாணம், ஒக. 18

களுத்துறை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 27 பேர் சட்டமா அதிபரினால் விடுதலை அளிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைக்குப் பரிந்துரை செய்யப்பட்டவர்கள் தமக்கென குறிக்கப்பட்ட திகதியில் அநுராதபுரம் நீதிமன்றத்துக்குச்சென்று கையொப்பம் இட்டு தமது விடுதலையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைக்குப் பரிந்துரை செய்யப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் நீதிமன்றில் விடுதலை பெற சமுகமளிக்க வேண்டிய திகதி என்பன வருமாறு:-

19 - 08 - 98 இல் அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டோர் விவரம்.

★ அப்புத்துரை ஞானகரன் — கோண்டாவில் தெற்கு.
★ அரியகுட்டி தவராணி— நவிண்டில்.
★ தேவதாஸ் மோகன் சுந்தரம் — சென். ஜோன் வீதி, குருநகர்.
★ ஜமேஸ் சிறீதரன் — தொண்டமானாறு.
★ குமாரசாமி உமாபதி— இமையாணன், உடுப்பிட்டி.

21 ஆம்திகதி அழைக்கப்பட்டோர் விவரம்:-

★ நடராஜா கமலேஸ்வரன்.
★ பொன்னுத்துரை ஜெகதீஸ்வரன் — தவசிக்குளம், கொடிகாமம்.
★ இராஜரட்ணம் கமலகாசன்—கோண்டாவில் மேற்கு.

28 ஆம் திகதி அழைக்கப்பட்டோர் விவரம்

★ மாணிக்கம் புஸ்பராணி — மணியந்துறை, உடுப்பிட்டி.
★ இராசையா ஐங்கரன்— அல்வாய் தெற்கு.

ஒக்ரோபர் 2 ஆம் திகதி அழைக்கப்பட்டோர்.

★ சிறீஸ்கந்தராஜ் சிறீரஞ்சன்—கச்சாய், கொடிகாமம்.

அழைக்கப்படும் திகதி குறிப்பிடப்படாதவர்களின் விவரம்

★ ஆறுமுகம் சிவலிங்கம்
★ குணரத்தினம் குணதாசன்
★ ஆறுமுகம் நந்தபவன்— கரம்பைக் குறிச்சி, வரணி.
★ ஜோன் பிரான்சிஸ் —
★ கிருஸ்ணராஜா ஜெயசீலன்
★ லாசறஸ் ஜோன்சன்
★ நல்லையா பிரதீபன்— மந்துவில் தெற்கு.
★ ராஜரத்னம் சிவப்பிரகாசம்
★ றாமி ஆனந்தா
★ ராஜேந்திரம் ஆதவன் - 2 ஆம் குறுக்கு வீதி, பருத்தித்துறை.
★ செல்வராஜ் பொன்னுவதி
★ சோமசுந்தரம் கிருஷ்ணராமசுந்தரம்-பன்னுகட்டை, பருத்தித்துறை
★ சுப்பிரமணியம் வரதராஜா — கலைவேம்படி, சுழிபுரம்.
★ தேவராஜா ரவீந்திரன் — கயவத்த, வடலியடைப்பு பண்டத்தரிப்பு.
★ துரைசிங்கம் திருச்செல்வன்
★ வெற்றிவேல் சிவலோகநாதன் — ஆசீர்வாதப்பர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

விடுதலைக்கு பரிந்துரைக்கப்பட்டும் திகதிகள் குறிப்பிடப்படாதவர்கள் ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்டத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(இ-9-7-ரி)

## லயன்ஸ்கழக ஆதரவில் தையற் பயிற்சி வகுப்பு

மருதனார்மடம்— உடுவில் வீதியில் அமைந்துள்ள சுன்னாகம் லயன்ஸ் கழக தொழிற்பயிற்சி நிலையத்தில் தற்போது பெண்களுக்கான தையற் பயிற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

முதற்கட்டமாக இப்பயிற்சிக்கு விண்ணப்பித்த 80 விண்ணப்பதாரிகளுள் 15 பேர் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு ஆறுமாத கால பயிற்சி வழங்கப்படுகின்றது.

கடந்த கால அனர்த்தங்களால் கணவன்மாரை இழந்த விதவைப் பெண்கள், தாய்- தந்தையரை இழந்த இளம் பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கே இப்பயிற்சி வழங்கப்படுவதாக லயன்ஸ் கழகச் செயலாளர் அ. நற்குணநாதன் தெரிவித்தார்.

ஆறுமாத கால பயிற்சியின் பின் இவர்கள் சுயமாகவே தொழில்வாய்ப்பினை மேற்கொள்வதற்குத் தேவையான உதவிகளும் வழங்கப்படுவதோடு, புதிதாக 15 பேருக்கு தொடர்ச்சியாக பயிற்சி வழங்கப்படும்.

இத்தொழிற்பயிற்சி நிலையத்துக்குத்தேவையானஐந்து தையல் இயந்திரங்களை சிங்கர் கம்பனியினர் இலவசமாக வழங்கி உள்ளனர்.

(இ-152)

## அம்பனில் போசாக்கு திட்டக் கருத்தரங்கு

செம்பியன்பற்று ஒக. 18

வடமராட்சி கிழக்கு அம்பனில் போசாக்கு நிகழ்ச்சித் திட்ட கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

இக் கருத்தரங்கில்

★ அயடின் பற்றாக்குறை கோளாறுகள்
★ வயிற்றோட்ட நோயை கட்டுப்படுத்தலும் முகாமைத்துவமும்
★ வீட்டுத் தோட்டம் மூலம் நிறையுணவு

போன்றவை பற்றி வைத்திய அதிகாரிகள் விளக்க உள்ளதாகவும் எனவே இப்போசாக்கு கருத்தரங்கில் தவறாது அனைவரையும் பங்கு பற்றுமாறும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையினர் கோரி உள்ளனர்.

[இ-36]

## சி. ஐ. டி. என்று கூறி வர்த்தகரிடம் கொள்ளை

வவுனியா, ஒக. 18

கொழும்பு அழுத் மாவத்தையில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இருந்த பெறுமதியான பொருள்களும், பணமும், அடையாள அட்டையும் ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத குழு ஒன்றினால் சனிக்கிழமை இரவு அபகரித்துச் செல்லப்பட்டன.

சம்பவதினம் ஆயுதம் தாங்கிய பிரஸ்தாப குழு தம்மை சி. ஐ. டி எனக் கூறிக்கொண்டு வீட்டைசோதனையிட வேண்டுமென கூறி வீட்டுக்குள் நுழைந்தது எனவும் —

உள்ளே நுழைந்ததும் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், 38 ஆயிரத்து 500 ரூபா பணத்தினையும், யாழ்ப்பாணம் அனுப்புவதற்காக வைத்திருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருள்களையும், அவர்களது அடையாள அட்டைகளையும் அவர்கள் அபகரித்துச் சென்றனர் எனவும் — தெரிவிக்கப்படுகின்றது.

(இ-164-9)

## வலி. கிழக்கு

## உ. அ. அதிபர் பணிமனை கட்டடத்துக்கு அடிக்கல்

வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நாளை புதன்கிழமை நடைபெறும்.

இக் கட்டடத்துக்கான அடிக்கல்லை வலி. கிழக்கு பிரதேசச் செயலாளர் க. கேதீஸ்வரன் நாளை புதன் கிழமை காலை 8-30மணிக்கு நடுவார்.

இவ் வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் செ. சண்முகநாதன் புதிய காணியின் உறுதியைக் கையேற்பார்.

புதிய காணிக்குள் அரச அதிபர் சம்பிரதாய முறைப்படி மரக்கண்டுகளையும் நடுவார்.

செயலகத்துக்குச் சொந்தமான காணியின் உறுதியை கட்டடக்குழுவின் செயலாளரும், நிர்வாக உத்தியோகத்தருமான எஸ். வல்லிபுரம் கையளிப்பார்.

அன்றைய தினம் கட்டடக் குழுவின் உறுப்பினர்களும் செயலக வளவிற்குள் மரக்கண்டுகளை நடுவார்கள்.

இந்த அடிக்கல் நடும் வைபவத்தின்போது நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இராசுக்குருக்கள் சமய முறைப்படி கிரியை கலை ஆரம்பித்து வைப்பார்.

(இ-30)

## சந்தைக் கட்டடவேலை

கொழும்புத்துறை, ஒக. 18

ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் வலி. தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு உப அலுவலக சந்தைக் கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

(இ-30)

## தேர்முட்டி புனரமைப்பு

வடமராட்சி வல்லிபுரக் கோவில் தேர்முட்டி புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரணசூழ்நிலையினால் இந்த தேர்முட்டி புனரமைப்பு வேலைகள் தாமதமடைந்தன.

(இ-139)

## 23 பட்டதாரிகளின் நியமனம் தாமதம்

### சங்கம் ஆட்சேபனை

யாழ்ப்பாணம், ஒக. 18

பட்டதாரி ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத்தோற்றி தவறவிடப்பட்ட 23 பட்டதாரிகளின் நியமனத்தை விரைவில் வழங்குவதாக கூறியும் இதுவரை பெயர்ப்பட்டியல் யாழ். கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படாதது குறித்து யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

மேற்படி தவறவிடப்பட்ட 23 பேரின் பட்டியல் ஏற்கனவே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், கடந்த 10 ஆம் திகதி யாழ். செயலகத்தில்நடை பெற்றவேலையற்ற பட்டதாரிகளின் உண்ணாவிரதத்தின்போது சங்கநிர்வாகிகளுக்கு தெரிவித்திருந்தார். எனினும் பட்டியல் இன்னும் கிடைக்காததைஅடுத்தே சங்கத்தினர் இப்போது ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

1994 ஆம் ஆண்டு வரையிலான கலை, வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகளும், 1996 ஆம் ஆண்டு வரையிலான விஞ்ஞானப் பட்டதாரிகளுமே நேர்முகப் பரீட்சையில் தோற்றி இன்னும் ஆசிரிய நியமனம் கிடைக்காத 23 பேர் ஆவர்.

இதேவேளை நுண்கலைத் துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கு இம் மாதம் 29 ஆம் திகதிக்குள் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் சாதகமான பதில் அளிக்கப்படும் என்று ஆளுநர் செயலாளரால் உறுதி அளிக்கப்பட்டது தெரிந்ததே.

(இ-185-27)

## நல்லொழுக்க நிறுவன நிகழ்வுகள்

வடமராட்சி, ஒக. 18

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் போதைப் பொருள் எதிர்ப்பு தினவிழாவும், பரிசளிப்பும், குழந்தை மையக்கல்வி முறைக்கண்காட்சியும் பருத்தித்துறை ஆத்தியடியில் உள்ள போருட் பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றன.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தலைவர் க. சூரியகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் குழந்தைமையக் கல்வி முறைக் கண்காட்சியைபருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலை அதிபர் திருமதி சீதாதேவி சுப்பிரமணியம் திறந்து வைத்தார்.

போதைப்பொருள் எதிர்ப்புப் பற்றி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசில்களும், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியில் சிறப்புத் தேர்வு பெற்ற பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இறுதியில் மரம்நடும் வைபவமும் இடம் பெற்றது.

(இ-173)


## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். மாநகரசபை, கணக்குப் பகுதி பிரதம எழுதுநர்

திரு. குலநாயகம்

அவர்களின் அருமைத் துணைவியான

திருமதி

**சரோஜினிதேவி குலநாயகம்**

அவர்களின் திடீர் மரணம் குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

கணக்குப்பகுதி உத்தியோகத்தர்கள்,
யாழ். மாநகரசபை.

(58451)



உ

வட்டுக்கோட்டை அராலி மேற்கு
கோட்டைக்காடு, நொச்சிபம்பதி.

## ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மஹோற்சவ பெருவிழா

ஷெ ஆலய மஹோற்சவ விழா 12-08-98 புதன் கிழமை பகல் கொடியேற்று விழாவுடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

தேர்த் திருவிழா
20-08-98 வியாழன் காலை 9-30மணி

தீர்த்தத் திருவிழா
21.08-98 வெள்ளிக்கிழமை காலை 10-30 மணி

பூங்காவனத் திருவிழா
22-08-98 சனிக்கிழமை பகல் அபிஷேகம் மாலை திருவிழா

மஹோற்சவக்குரு:
''பண்டிதர்'' ''சிவாகம கிரியாபானு''
''சிவாகம வித்பத்ஜோதி''
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
புன்னாலைக்கட்டுவன்

அனைவரும் வந்து தரிசித்து எம்பெருமான் அருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

— ஆலய பரிபாலனசபை

விளம்பர அன்பளிப்பு:
**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
அற்கின்சன் றோட், வட்டுக்கோட்டை.

(சி/458 5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ச.ச. நிலைய பொன்விழா

யாழ்ப்பாணம், ஓக. 18

அராலி கிழக்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவுப் பொன்விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய முன்றலில் த. சதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ஐ-8)

# ரூபா 50 கோடி பொருள் இழப்பால் பொருளாதார நெருக்கடி ஆபத்து!

## யாழ். வர்த்தகர்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். வர்த்தகர்களுக்குச் சொந்தமான சுமார் 50கோடி ரூபா பெறுமதியான பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு யாழ். வர்த்தக வட்டாரத்தில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தலாம். எனவே அரசு உரிய நஷ்டஈட்டை வழங்கவேண்டும்.

'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் அழிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் குழு ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய உண்ணாவிரதத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு விளாசமிடப்பட்ட இம் மகஜர் யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

யாழ். வர்த்தகர்களுக்கும் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான பொருள்களே ''குட்வில் கைட்'' என்னும் நிறுவனத்திற்குச் சொந்தமான ''பிரின்ஸஸ் காஷ்'' என்னும் கப்பலுடன் சேர்த்து அழிக்கப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட இப்பொருள்கள் வர்த்தக வாணிபத் துறை அமைச்சுக்கு ஊடாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டு ஏ. எம். ரி. ஸ்ரீகுமரன் கிளியரன்ஸ் ஏஜன்ட் ஊடாக கடற்படையினரின் சோதனையின் பின்பே கப்பலுக்கு ஏற்றப்பட்டன. இதில் சகல விதமான சட்டபூர்வமான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன என்பதை இங்கு அழுத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

சுமார் 6500 மெற்றிக் தொன் அளவுள்ள 50 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் இங்கு அழிக்கப்பட்டுள்ளன. இந்த அழிவு யாழ். வர்த்தக வட்டாரத்திலான பணச் சுற்றோட்டத்தில் பெரும் பற்றாக்குறையை ஏற்படுத்துவதும் அல்லாமல் விலை வாசி உயர்வையும் மொத்தத்தில் ஒரு பொருளாதார நெருக்கடியையும் உருவாக்கலாம். தனிப்பட்ட வர்த்தகர்கள் ஈடுசெய்ய முடியாத இப்பேரிழப்பு பெரும் வர்த்தக நெருக்கடியை உருவாக்கலாம்.

எனவே யாழ்ப்பாண பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் அக்கறை உள்ளதாக கூறிவரும் அரசு இப்பேரிழப்புக்கான நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என்பதே வர்த்தக சமூகத்தின் கோரிக்கை ஆகும்.

சட்ட ரீதியான வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்வதும் விசாரிப்பதும் எமக்கு வேதனையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே கைது செய்யப்பட்ட எஸ். வீ. எம். நிறுவனத்தின் பங்குதாரரான சதானந்தனை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோருகின்றோம்.

எனவே ஜனாதிபதி அவர்கள் இது விடயத்தில் விசேட அக்கறை எடுத்து யாழ். வர்த்தகர்களுக்கான நஷ்டஈட்டை வழங்குவதுடன் இது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட வர்த்தகரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# இராணுவம் வந்திருப்பதாகக் கூறி நகரில் இரு இடங்களில் கொள்ளை!

## ஞாயிறு நள்ளிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். நகரப் பகுதியில் நேற்று இரவு இரு இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராணுவம் சோதனையிட வந்திருப்பதாகக் கூறியே கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் ராசாவின் தோட்டத்தில் நேற்று நள்ளிரவு நடைபெற்ற முதலாவது சம்பவத்தில் இராணுவம் என்று கூறி வீட்டுக்குள் இறங்கிய திருடர்கள் பிஸ்டல் போன்ற ஒன்றைக் காட்டி வீட்டில் தனிமையாக இருந்த பெண் ஒருவரின் தாலிக் கொடியை அபகரித்துச் சென்றுள்ளனர். இதன் பெறுமதி ஒரு லட்சம் ரூபா என்று சொல்லப்படுகிறது.

நாவலர் வீதி, பருத்தித்துறை வீதிச் சந்திக்கும் சமீபமாக ஆனைப்பந்தியில் அதிகாலை 1.00 மணி அளவில் மற்றைய திருட்டு இடம் பெற்றது.

இராணுவம் என்று கூறி, கதவைத் திறக்க வைத்து நகைகளை இவர்கள் அபகரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்குச் சாப்பாடு கொடுக்கிறீர்களா என்று இராணுவ பாணியில் மிரட்டிவிட்டே இவர்கள் பெண்கள் அணிந்திருந்த நகைகளைக் கழற்றிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதே சமயம் இப்படியான களவு நகைகள் திருடர்களால் விற்கப்படலாம் என்றும் —

இது குறித்து அடகு பிடிப்போரும், நகைக்கடை உரிமையாளர்களும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும்— யாழ். நகரப் பொலீஸ் பொறுப்பதிகாரி மோகனதாஸ் கோரி உள்ளார்.

முன் பின் அறிமுகம் இல்லாத நபர்களிடமிருந்து நகைகளை வாங்க வேண்டாம் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார். (இ)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
செ. சிவகரனின்
அன்புத் தந்தையார்

### ந. செல்லையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1 ஆம் வருட மாணவர்கள்
விஞ்ஞான பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

(58462)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக திணைக்களத்தில் பணிபுரிந்த

### நடேசு மனோகரன்

(துறைமுக வெளிக்கள உத்தியோகத்தர் (W.F.O.)
உணவுத் திணைக்களம், யாழ். செயலகம்)

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புனர்வாழ்வுப் பகுதி,
யாழ். செயலகம்.

(58458)



## மரண அறிவித்தல்

### நல்லையா இராசநாயகம்

நுணாவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா இராசநாயகம் 14-8-98 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் நல்லையா - அன்னப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வனும், லீலாவதியின் பாசமிகு கணவரும், இராஜினி, தயாளினி, வினோதினி ஆகியோரின் அன்புத்தந்தையும், சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம், கேதீஸ்வரி, குகனேஸ்வரி, வரதலிங்கம், சத்தியலிங்கம், நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திராதேவி, ஜெயராணி, சுதந்திரமோகன், இராசசிங்கம், றஜித்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20-08-98 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
ந. சுந்தரலிங்கம்
(நகரசபை, சாவகச்சேரி)

(சி/4594)


## சமய நிகழ்ச்சிகளில்

திருநெல்வேலி, ஓக. 18

இருபாலை கிழக்கு லிங்கப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியோற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திரு விழா26 ஆம் திகதியன்றும், தீர்த்தத்திரு விழா27 ஆம் திகதியன்றும், வசந்தோற்சவம் 28 ஆம் திகதியன்றும் நடைபெறவுள்ளன

உற்சவ நாள்களில் கலா விநோதன்'' அச்சுவேலி கணவதிப்பிள்ளை (சின்ன மணி) குழுவினரின் ''மகா பாரதம்'' என்ற பொருள் பற்றிய வில்லிசை இடம் பெறவுள்ளது. (ஐ-135)

* * *

யாழ்ப்பாணம் ஓக. 18

நீர்வேலி புனித பரலோக அன்னை ஆலய நவநாள்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

நாளை புதன்கிழமை காலை 7.30 மணிக்கு சிறுவர்களுக்கான 'முதல் நன்மை' திருப்பலியும், 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை நற்கருணை வழிபாடும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுருப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (இ)

## கொட்டாஞ்சேனையில்:

# யாழ். வாசிகளிடமிருந்து 60 பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், ஓக. 18

கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள தமிழர் ஒருவரின் வீட்டிலிருந்து கத்தி முனையில் சுமார் அறுபது பவுண் தங்க நகைகள் நேற்று முன்தினம் இரவு கொள்ளையடிக்கப்பட்டன.

இரவு 7 மணியளவில் இவ்வீட்டிற்குச் சென்ற கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களை கத்தி முனையில் மிரட்டி சங்கிலி, தாலிக்கொடி, மோதிரம் உட்பட அறுபது பவுண் நகைகளை அபகரித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

க. பரமேஸ்வரன் என்பவரின் வீட்டிலே இக்கொள்ளை இடம்பெற்றது. இவரும் மனைவியும் ஆலயம் ஒன்றிற்குச் சென்றிருந்த சமயம் இவரது வீட்டிற்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கு தங்கியிருந்த வீட்டு உரிமையாளர்களின் யாழ்ப்பாணத்து உறவினர்கள் அணிந்திருந்த நகைகளை அபகரித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் கொட்டாஞ்சேனை பொலீஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.


## நரேன் வீடியோ

- மக்களின் உள்ளம் கவர்ந்த இயக்குநர் K. பாலச்சந்தரின் ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ''கையளவு மனசு''
- சிறீபிரியாவின் ''விடுதலை''
- ''சின்ன மம்மி சின்ன டடி''
- திண்டுக்கல் லியோனியின் ''பழைய பாடலா? புதிய பாடலா?'' — பாட்டு மன்றம்.
- காதல் திருமணமா? நிச்சயிக்கப்பட்ட திருமணமா?
- திரை இசைப் பாடல்களில் இருப்பது... இனிய காதலா? சமூகக் காதலா?
- திண்டுக்கல் லியோனியின் பழைய பாடலா? புதிய பாடலா? பட்டி மன்றம்
- உங்கள் பேரபிமானம் பெற்ற 'விசுவின்' ''அரட்டை அரங்கம்''

இவையாவும் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம், அத்துடன் அண்மையில் CD யில் வெளியான பழைய, புதிய திரைப்படங்கள் அனைத்தும் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

### நரேன் வீடியோ

வீரமாகாளி அம்மன் கோயிலடி,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4593)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்படைகளின் கட்டளை அதிகாரியாக
# ராணுவ தளபதி தளுவத்தை நியமனம்!

கொழும்பு, ஓக. 18

மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள கூட்டுப் படைகள் கட்டளையகத்தின் (JOC) பிரதம கட்டளை அதிகாரியாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் டி. தளுவத்தை நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இராணுவத் தளபதியாக வகிக்கும் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இப்பதவி அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் முப்படைகள் மற்றும் பொலீஸாரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட இந்த கூட்டுப் படைக் கட்டளையகத்தின் பிரதம கட்டளை அதிகாரி பதவிக்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திஸேராவே நியமிக்கப்படுவார் என முன்னர் பாதுகாப்பு வட்டாரங்களில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது அப்பதவி இராணுவத் தளபதியிடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

கூட்டுப் படைத் தலைமையகம் கடந்த 3 ஆம் திகதி முதல் சம்பிரதாய பூர்வமாக இயங்கத் தொடங்கியுள்ளது.

முன்னர் ஜே. ஆரின் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் கூட்டுப் படைக் கட்டளையகம் 1993 ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரை தொடர்ந்து செயற்பட்டு வந்தது.

இதன் முதனாவது பிரதம கட்டளை அதிகாரியாக ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க பொறுப்பு வகித்தார். பின்னர் ஜெனரல் சிறில் ரணதுங்க, ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ஆகியோரும் இப்பதவியை வகித்தனர்.

இதேவேளை —

வவுனியாவைத் தளமாகக் கொண்டு தற்போது செயற்பட்டுவரும் கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் தொடர்ந்து செயற்படும் என்றும் —

அதன் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஸ்ரீலால்வீரசூரிய தொடர்ந்து பொறுப்பு வகிப்பார் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் பிரதம நிர்வாக அதிகாரியான ஸ்ரீலால்வீரசூரிய அப்பதவிக்கு மேலதிகமாக கூட்டு நடவடிக்கைத் தலைமையக கட்டளை அதிகாரியாகவும் பணிபுரிகின்றார். (ஐ)

## மகப்பேற்று நிபுணர் இல்லை:
# பிரசவத்தின் போது தாய் இரத்த பெருக்கால் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 18

குழந்தை பிரசவத்துக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் பிரசவத்தின் பின் ஏற்பட்ட அதிக இரத்தப் பெருக்குக் காரணமாக உயிரிழந்தார்.

அராலியைச் சேர்ந்த குலநாயகம் சரோஜினி தேவி (வயது 40) என்ற பெண்ணே மரணமானவராவார்.

இவர் அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆசிரியை ஆவார்.

நேற்று முன்தினம் காலை பிரசவத்துக்கென இவர் அனுமதிக்கப்பட்டார். அது அவருக்கு இரண்டாவது பிரசவம். அன்றிரவு பிரசவ வேதனை காணப்பட்டதை அடுத்து அவர் பிரசவஅறைக்குள் அனுமதிக்கப்பட்டார்.

மகப்பேற்று நிபுணர்கள் யாருமற்ற நிலையில் 'ஹவுஸ் ஒவ்வீஸரே' பிரசவத்தைக் கவனித்தார். கஷ்ட பிரசவம் ஆகையால் குழந்தை உபகரணங்கள் பாவிக்கப்பட்டே பிரசவிக்க செய்யப்பட்டது.

குழந்தையை பிரசவித்த சில நிமிட நேரத்தில் தாய் அதிக இரத்தப் பெருக்குக்கு உள்ளாகி மயக்க நிலையை அடைந்தார்.

இரத்தப் பெருக்கு அதிகரித்தும் மகப்பேற்று நிபுணர் அழைக்கப்படவில்லை.

இரத்தப் பெருக்கு அளவு அதிகரித்ததால் அவர் சில மணி நேரத்தில் அங்கு மரணமானார். அவர் பிரசவித்த பெண் குழந்தை தற்போது நிறை குறைந்த குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் பராமரிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளது. குழந்தை நலமேயுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையின்பின் தாயின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. டாக்டரின் வைத்திய அறிக்கையின்படி அதிக இரத்தப் பெருக்கே மரணத்திற்குக் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)


A/L எடுத்தவர்களுக்கு என விசேட பிரிவுகள்
(5ஆம், 6ஆம் பிரிவுகள்)

ஆரம்பம்:
23 - 08 - 1998

**OXFORD**
**English Academy**

ஆலடிபிள்ளையார்வீதி
சுப்பர்மடம்,
பருத்தித்துறை.

by: Mr. B. Jothy
B.Com, (Hons)

அனுமதியை அலுவலகத்தில முன்கூட்டியே பெறவும்.

★ மிக விரைவில் நெல்லியடியில் எமது கிளை நிறுவனம் ஆரம்பமாகவுள்ளது

(58447)



98/99
**கல்வி ஆண்டுக்கான**

3 ஆம் பருவகாலத்துக்குரிய கணனி கற்கை நெறிகள் பல புதிய கணனித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பம்!

05 - 09 - 98

மேலதிக விவரங்கள்!
29 - 08 - 98 உதயனில்

★ A/L 98 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு கட்டணத்தில் விசேட சலுகை.

- Director
**I. I. S.**

(/4523)


## நல்லூரில் இன்று

கொழும்புத்துறை, ஓக. 18

நல்லூர் உற்சவ காலத்தை யொட்டி இளங் கலைஞர் மன்றம் துர்க்காதேவி மண்டபத்தில் மாலை 5. 30 மணி முதல் 7 மணி வரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை பொன் ஸ்ரீ வாமதேவவின் இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

துர்க்காதேவியின் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-30)

★ ★ ★

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி முத்து விநாயகர் ஆலயத்தில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா மாலை 5.15 மணிக்கு நடத்தி வரும் தெய்வீக இசைச் சொற்பொழிவுத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை "அனுமன் தூது" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ஐ-4-8-30)

## நல்லூரில் தொடர்ந்து அன்னதானம்

யாழ்ப்பாணம், ஓக. 18

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. வர்த்தகர்களின் ஆதரவுடன் வழங்கப்பட்டு வரும் அன்னதானத்தில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள்கலந்து கொண்டு வருகின்றனர்.

தேர், தீர்த்த தினங்களில் அதிக எண்ணிக்கையான பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அன்னதான ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-9)

## புலி...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இவரது சடலம் வவுனியா செஞ்சிலுவை இணைப்பாளர் சி. கிஷோர் மூலம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

களை பெரும்பாலும் வீதிகளில் காணப்படவில்லை.

நேற்று இராணுவத்தினர் தலையிட்டுச் சில கடைகளைத் திறந்த போதிலும் அவர்கள் சென்றதும் சிறிது நேரத்தின்பின் மீண்டும் கடைகள் மூடப்பட்டன.

அரச திணைக்களங்களில் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களே கடமைக்குச் சமுகமளித்திருந்தனர்.

இந்த ஹர்த்தால் இன்றும் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-164)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

நிறுத்தப்பட்டிருந்த பத்து மோட்டார் சைக்கிள்கள், 15 சைக்கிள்கள் என்பவையும் பலத்த சேதமாகின.

குண்டு வெடிப்புச் சமயம் அவ்வழியே வந்த தனியார் பஸ்ஸின் சாரதி, கிளீனர் ஆகியோர் பொலீஸாரால் [illegible] பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது

## மக்கள் போராட்டம் நீடிப்பு
# அரச அலுவலகப் பணிகள் வன்னியில் ஸ்தம்பிதம்!

வவுனியா, ஓக. 18

நிவாரணம் பெறும் இடம் பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதை ஆட்சேபித்து வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வெகுஜனப் போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

பிரதேச செயலகங்கள் அரச அலுவலகங்களுக்கு வெளியே மனித சங்கிலிப் போராட்டங்கள் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் அலுவலகப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

(ஐ-9)

## அவசியப்....

(முதலாம் பக்கத் தொடர்)

றார்கள்.

பல இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்களைக் கடலோடு இழந்துவிட்ட சில வர்த்தகர்களுக்காக மக்கள் ஆதரவும், அனுதாபமும் திரும்ப வேண்டிய இந்தச் சமயத்தில்—

ஒட்டு மொத்தமாக சகல வர்த்தகர்களையும் கொள்ளையர்கள் போல மக்கள் கருதி கொதித்து எழ வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கும் விதத்தில் பல வர்த்தகர்கள் நடந்து கொள்கின்றார்கள். ஏனைய வர்த்தகர்களும், வர்த்தக சங்கங்களும் இதை வேடிக்கை பார்ப்பது போல பார்த்திருப்பதும் வேதனையைத் தருகின்றது — என்று நகரின் மூத்த பிரஜை ஒருவர் குறிப்பிட்டார்.

வர்த்தகர்களின் இந்தப் போக்கு படைத் தரப்பையும் சீற்றமுற வைத்திருப்பதாகத் தெரிகின்றது. பதுக்கல் மற்றும் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர்களை கையும் களவுமாகப் பிடிப்பதற்காக சீருடையில்லாமல் படையணி ஒன்று இன்று முதல் களத்தில் இறங்கும் என படை அதிகாரி ஒருவர்குறிப்பிட்டார்.

சீனி, மா உட்பட எந்த அத்தியாவசிய பொருள்களுக்கும்தட்டுப்பாடுஇல்லை எனவும்—

அப்பொருள்கள் போதிய ளவு கையிருப்பில் உள்ளன எனவும் —

யாழ். செயலகம் மற்றும் யாழ். வர்த்தகர்கள் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மண்எண்ணெய் தாராளமாக இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிரிவு தெரிவித்தது. [உ-5-100]

## நூற்றுக்கணக்கான...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ. பி. டி. பி., ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

இந்தஅடையாள உண்ணாவிரதத்தில் குடா நாட்டில் பல பாகங்களிலுமிருந்து வர்த்தகர்கள் கலந்து கொண்ட போதிலும் வர்த்தக நிறுவனங்கள் யாவும் நேற்று வழமை போல் திறக்கப்பட்டிருந்தன.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் சார்பில் யாழ். மாவட்ட வர்த்தகர் சங்க சம்மேளனத் தலைவர் எஸ். செல்வராசா, யாழ். வணிகர் சங்க தலைவர் க. மகாதேவசிவம், செயலாளர் தி. சிவதாசன், உப தலைவர் வி. குணரத்தினம் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று யாழ். அரச அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் யாழ். மாவட்ட உணவு நிலை தொடர்பாக மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாகவும் அம்மாநாட்டில் ஜனாதிபதியும் கலந்து கொள்வதால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் முழு விவரங்களையும் அவருக்குத் தெரிவித்து நஷ்டஈடு பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்றும் அரச அதிபர் உண்ணாவிரதிகளிடம் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பினைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் உண்ணாவிரதிகளுக்கு பழரசம் வழங்கி அடையாள உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது.

உண்ணாவிரத முடிவில் தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாவட்ட செயலாளர் பொன். மதிமுகராசா, ஈ. பி. டி. பி வலி மேற்கு பிரதேச சபைத்தலைவர் ந. திரிலோகநாதன், புளொட் அமைப்பின் யாழ். அமைப்பாளர் செ. கிருபைராசா, ஈ. பி. ஆர். எல். எவ். யாழ். மாவட்டப் பொறுப்பாளர். த. சுபத்திரன், ரெலோ பிரதிநிதி அ. சுரேஷ் ஆகியோர் வர்த்தகர்களின் கோரிக்கைக்கு தமது ஆதரவைத் தெரிவித்து உரையாற்றினர்.

உண்ணாவிரத முடிவில் யாழ். அரசாங்க அதிபரிடம் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் கோரிக்கை அடங்கிய ஜனாதிபதிக்கான மகஜர் வர்த்தகர்களினால் கையளிக்கப்பட்டது.

(மகஜரின் முழு விவரம் [illegible] ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.)

(ஐ-5-15-100-139)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்)

யும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்வதற்கான அனுமதி கிடைக்காததால் அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மல்லாவியிலேயே தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

மல்லாவியில் இருந்து அவர்களைக் கொழும்புக்கு வாகன அணி மூலம் அழைத்து வருவதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு நேற்று வழங்கியதை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அவர்களை இன்று கொழும்புக்கு அழைத்துவர ஏற்பாடுகள் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மல்லாவியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் இன்று 17 மாலுமிகளையும் மடுச்சந்திக்கு அழைத்து வருவர் என்றும்—

கொழும்பில் இருந்து செல்லும் செஞ்சிலுவைக் குழுவினர் மடுச் சந்தியில் வைத்து அவர்களைப் பொறுப்பேற்று வவுனியா ஊடாக கொழும்புக்குக் கூட்டி வருவர் எனவும்—

தெரிவிக்கப்பட்டது.

இந்திய மாலுமிகளை பாதுகாப்பாக விடுவிக்கும் முயற்சியில் இந்தியத் தூதரகம் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

இன்று கொழும்புக்கு அழைத்து வரப்படும் மாலுமிகள் உடனடியாக இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவர்.

அதன் பின்னரே அவர்கள் பொலீஸ் விசாரணைக்குட்படுத்தப்படுவர் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

இந்தக் கப்பல் விவகாரம் தொடர்பாக கொழும்பில் கைது செய்யப்பட்ட வர்த்தகர் சதானந்தனும், கப்பல் முகவர் நிறுவனத்தின் அதிகாரியான புத்திசிறிவர்த்தனவும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-3-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org